பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தின்

# முற்றம்


கலை, இலக்கிய, செய்தி இதழ்

ஆண்டு 14 மலர் 3 இதழ் 54

## அஞ்சலிக்கின்றோம்






## திருமறைக்கலா மன்றத்தின் 50வது வருட பொன்விழாக் காட்சிகள்




## வாழ்த்துகின்றோம்



கலை வண்ணம்–15 நிகழ்வில்
மதிப்பளிக்கப்படும் கலைஞர்
T. தயாநித அவர்கள்



யாழ் ஆயர்ராக தெரிவுசெய்யப்பட்ட அதி வந்.
மேதகு ஜஸ்ரின் ஞானபிரகாசம் அவர்கள்



18.10.2015ல் சு.வு.ஆ பிறதர்ஸ் ஸ்தாபனத்தால்
மதிப்பளிக்கப்பட்ட கலைஞர்
வன்னைதெய்வம் அவர்கள்

திருமறைக்கலாமன்றம் பிரான்ஸ்


**முற்றம்**

**காலாண்டுச் சஞ்சிகை**

ஆண்டு 14 மலர் 3 இதழ் 54

இதழ் ஆசிரியர் : டேமியன் சூரி

தொடர்புகள் : A.V.Damian
8, Bd.Raymond Poincré - Esc6
94170 Le Perreux - FRANCE
E-Mail damian94@hotmail.fr




## கலாமுக்கு கவிதாஞ்சலி!

மரணமே உனக்கொரு
மரணம் வராதோ
சாவே உனக்கொரு
சாவே வராதோ
என்ற கண்ணதாசனின்
வரிகளே நினைவுக்கு வரும்
கலாமின் மறைவு செய்தி கேட்டு!

இதை செய்திருக் கலாம்
அதை செய்திருக் கலாம்
என்றே மற்றோர் பலர் சொல்ல
அவற்றை செய்து காட்டியவர் கலாம்!

நமது ராக்கெட் சோதனைகளை
நாமே கிண்டல் செய்து
கார்டுன் போட்டபோது
அக்கினி ஏவுகணையாய்
சீறியவர் !

புத்தரை இரண்டாம் முறை
சிரிக்க வைத்தவர்!
போக்ரானில் வெடிக்க வைத்தவர் !

அணு சோதனை செய்து
அகில உலகமும் மிரள வைத்தவர்!

ராணுவம், அறிவியல்,
கல்வி, குழந்தைகள்
ஏழைகள் என
எல்லோரையும்
நம்மவர் என நேசிக்க வைத்தவர்
கலாமுக்கு கவிதாஞ்சலி !

**வணக்கம்!**

அது சிந்துவெளி நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்டது. சங்ககால இலக்கியங்களிலும், சங்கம் மருவிய காப்பியமாகிய சிலப்பதிகாரத் திலும் அதுபற்றிச் சிறப்பாபக் கூறப்பட்டது; திரு வாசகத்திலும் தேவார பதிகங்களிலும் அது பதிவு செய்யப்பட்ட து; அதுவே யாழ்!

அத்தகைய யாழை மீட்டுப் பரிசுபெற்ற பாணனின் கதை பற்றிய செய்தி வரலாறாக இருக்கலாம்; வரலாற்றுக் குறியீடாக இருக்கலாம்; அன்றேல், வெறும் புனைகதையாகவும் இருக்கலாம். ஆயினும், ஆண்டா ண்டு காலமாக, வாழையடி வாழையாக, யாழ் இசையால் பரிசுபெற்ற மண்ணில் வாழ்கின்றோம் என்னும் உணர்வுடன் பாணன் மண்ணில் வாழ்ந்தவர்களும், வாழ்ந்துகொண்டிருப்பவர்களும் அச்செய்தியை நம்பி, அதைத் தன் இருப்பின் தனித்துவமாக இணைத்துக்கொண்டனர் என்ப தும், அவர்களுள் பலருடைய ஆழ்மனதில் அத்தரவு குறிப்பிட த்தக்க செல்வாக்கைச் செலுத்திவந்துள்ளது என்பதும் மறைக்க வும் மறுக்கவும் முடியாத உண்மை.

அந்தப் பரம்பரையில் வந்துதித்தோரது அடி உள்ளத்தில் யாழின் இனிய ஓசை கேட்டுக்கொண்டேயிருக்கும்; யாழ் இசையின் வேறுபட்ட பண்கள் வரலாற்றுத் தடங்களாகப் பதிவு செய்யப்பட்டுக்கொண்டே யிருக்கும். பாணர் பரம்பரையினர் அதை மீட்டும்போது அதில் எழும் பண் வேறு. அந்நி யர்கள் தீண்டும்போது ஒலிக்கும் பண் வேறு; தாலாட்டுக்கு மீட்டிய நீலா ம்பரியும், ஆனந்தபைரவியும், மங்களத்துக்கும் மகிழ்ச்சிக்கும் மீட்டிய மோகனமும், கல்யாணியும், குறிஞ்சியும், அன்புக்கு மீட்டிய சாரங்காவும், காதலுக்கு மீட்டிய காமாஸும், பக்திக்கு மீட்டிய இந்தோளமும், கானடாவும், சண்முகப்பிரியாவும், வீர த்துக்கு மீட்டிய அடானாவும், பிலாகலியும், நாட்டையும், ஹம்ச த்வனியும், கருணைக்கு மீட்டிய ஆபோகியும், சகானாவும் முதல் வகையில் ஒரு சில பண் ஒலிகள். சோகத்துக்கும் இழப்புக்கும் மீட்டிய முகாரி இரண்டாவது வகையைச் சார்ந்த யாழின் ஒலி.

கால ஓட்டத்தில் சுரஞானமும், இராக தாள ஞானமும் அறியாத அந்நியர்களின் கைப்பட்டு, முகாரி ஓயாது ஒலித்த வேளை அபசுரம் எழுந்தது. சுடும் வெயிலிலும், கொட்டும் மழையிலும், வாட்டும் பனியிலும் வாடி, நரம்புகள் அறுந்த நிலையில் இருந்த யாழ் இருந்த யாழ், குலத்தொழிலில் அக் கறையற்று தம் குலத்தையே துண்டாடிய சில பாணர்களின் வினையால் சிதைந்து போனது.

இருப்பை இழந்த யாழின் கதிபற்றி வடஅமெரிக்க, ஐரோ ப்பிய, இந் திய நாடுகளின் பல்பலைக்கழகங்களில் இசைக்கருவி த்துறை பற்றி மாணவ மாணவியர் திறனாய்வு ஏடுகள் வரை வார்கள். யாழின் அழிவுபற்றி ஒல்காப் புகழ் தொல்காப்பியரும், திருநீலகண்ட யாழ்ப்பாணரும், திருப்பாணாழ்வாரும், விபுலா னந்த அடிகளும் கண்ணீர் வடிப்பார்களோ?

**நீ.மரியசேவியர் அடிகள்.**

# முதுமையில் இயலாமையின்றி வாழ...

- வ.செ. நடராசன் -

முதுமையில் மிகவும் கொடியது என்ன தெரியுமா? அதுதான் முதுமையில் ஏற்படும் இயலாமை. அதாவது, வயதான காலத்தில் தனது தேவைகளுக்காக மற்றவர்களைச் சார்ந்திருப்பது.

உதாரணம்: குளிப்பதற்கு, உடை உடுத்துவதற்கு, சாப்பிடுவதற்கு, நடப்பதற்கு இப்படி தன்னுடைய ஒவ்வொரு தேவைகளுக்கும் மற்றவர்களைச் சார்ந்திருப்பது தான் மிகவும் கொடுமையானது.

இந்த இயலாமையைத் தடுத்து, தன் சொந்தக் காலிலேயே நிற்க ஏதாவது வழிகள் உண்டா?

உடல் நோய்கள்: பக்கவாதம், உதறுவாதம் (பார்க்கின்சன்ஸ்), மூட்டு வலி, உடல் பருமன், கண் பார்வைக் குறைவு, காது கேளாமை, ஆஸ்துமா.

மனநோய்கள்: மனச்சோர்வு, மறதி நோய் எனும் டிமென்சியா.

குடும்பம், நிதி சார்ந்தவைகள்: நிதி வசதியின்மை, மனைவி இழந்தவர்கள், விதவைகள், குழந்தைப்பேறு இல்லாதவர்கள்.

முதுமையில் எந்த உபாதையும் தராமல், எந்த அறிகுறியையும் வெளிப்படுத்தாமல், இருளில் ஒளிந்திருக்கும் திருடனைப் போல பல நோய்கள் தொல்லையின்றி மறைந்திருக்கும்.

ஆண்டுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வதின் மூலம் மறைந்திருக்கும் பல நோய்களைக் கண்டுகொள்ள முடியும் மற்றும் அதற்குத் தக்க சிகிச்சை அளிக்க முடியும்.

இயலாமை இன்றி வாழ, வருமுன் காக்க, கால முறைப்படி பரிசோதனை செய்ய வேண்டும்.

முதியவர்கள் இறப்பிற்கு முக்கியக் காரணம் நுரையீரல் சார்ந்த நோய்களாகும். இதைத் தவிர்க்க தடுப்பூசிகள் உள்ளன.

உ.ம். நிமோனியாவுக்கு ஒரே ஒரு தடுப்பூசி போட்டுக் கொண்டால் ஆயுள் முழுவதும் இந்நோயிலிருந்து விடுபடலாம். முதியவர்கள் அடிக்கடி கீழே விழ வாய்ப்புகள் அதிகம் இருப்பதினால், டெட்டனஸ் தடுப்பூசி 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை போட்டுக் கொள்வது நல்லது.

குளிர்காலத்தில் வரும் ப்ளூ காய்ச்சலைத் தடுக்க ஆண்டுக்கு ஒரு முறை ப்ளூ தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளலாம்.

முதுமைப் பருவத்தில் வரும் பல நோய்களை விரட்டும் சக்தி உடற்பயிற்சிக்கு உண்டு. வேகமாக நடத்தல், சைக்கிள் ஓட்டுவது, நீந்துவது, வீட்டிற்குள்ளேயே விளையாடுவது போன்ற உடற்பயிற்சிகளைச் செய்யலாம். நாள்தோறும் மூன்றிலிருந்து ஐந்து கி.மீ. தொலைவு நடப்பது நல்லது அல்லது 30 முதல் 45 நிமிடங்கள் வரை உடற்பயிற்சி செய்ய வேண்டும். சிதறி ஓடும் எண்ணங்களை ஒரு நிலைப்படுத்துவதே தியானம். தியானத்தால் மனம் அமைதி அடைகிறது.

தெளிவான சிந்தனை கிடைக்கிறது. மனதை ஒருநிலைப்படுத்தி, நாம் நினைத்ததைச் சாதிக்கக் கூடிய தெளிவு பிறக்கிறது. சமீப காலமாக நமது உணவுப் பழக்கத்தில் பழைமையை நோக்கிப் புறப்பட வேண்டியதாயிற்று. அதுதான் மில்லட்ஸ் என்னும் சிறுதானியங்கள் அடங்கிய உணவுகள்.

முதுமைக் காலத்திற்கு வேண்டிய எல்லா வகையான சத்துகளும் சிறுதானியங்களில் இருப்பதால், அதை முடிந்தவரையில் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அரிசி மற்றும் உணவில் உப்பைக் குறைக்க வேண்டும், நீரை அதிகம் அருந்த வேண்டும்.

எவ்வளவு வயதானாலும் குழந்தை மனநிலையில் இருக்கவே பலரும் விரும்புவார்கள். நம்மை மற்றவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டும். அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இருந்தால், நீங்கள் மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டிய கட்டாய நிலையே உருவாகும்.

அதனால், உங்கள் மீது மற்றவர்களுக்கு வெறுப்பும் வந்துவிடும். எந்தவொரு சின்ன வேலையாக இருந்தாலும் அதை யாருடைய துணையும் இல்லாமல் நீங்களாகவே செய்யப் பழகுங்கள்.


முதுமைக் காலத்தை நிம்மதியாக நகர்த்துவதற்கு பணம் மிக மிக அவசியம். வேகமான வாழ்க்கைமுறை மாற்றங்களைக் கண்டுவரும் இன்றைய உலகில் உண்மையான அன்பிற்கோ, பாசத்திற்கோ மதிப்பு இல்லை. முதுமையில் ஏற்படும் இயலாமையைத் தடுக்க, நடுத்தர வயதிலிருந்தே முயற்சியைத் தொடங்க வேண்டும்.


கால முறைப்படி பரிசோதனை, தினமும் செய்யும் உடற்பயிற்சி, சிறுதானியங்கள் அடங்கிய உணவுப் பழக்கம், தடுப்பூசி போட்டுக் கொள்வது, தினமும் தியானம் செய்வது, முடிந்தளவிற்கு சொந்தக்காலில் நிற்பது அவசியம்.

இத்துடன் தேவையான நிதி வசதியை வைத்துக் கொண்டால், முதுமையில் ஏற்படும் இயலாமை எனும் அரக்கனை கண்டிப்பாக விரட்ட முடியும்.

பிறர் உதவியின்றி சொந்தக்காலில் நிற்க முடியும்.

***நன்றி - தினமணி -***





# புலம்பெயர் தேசங்களில் தேசியக் கூத்து மரபின் தேவையும் தமிழ் வளர்ச்சியில் அதன் தாக்கமும்

**ஐரோப்பிய தமிழ் ஆய்வியல் மாநாட்டில் - சாம் பிரதீபன்**

கலை என்பதும், அதன் அழகியல் என்பதும் மனிதர்களால் எப்பொழுதும் விரும்பப்படும் ஒரு மகிழ்வூட்டல் வடிவம் என்பது மறுப்பிற்கு உட்படாத ஒரு உண்மை என அனைவரும் அறிவோம். இந்த கலைகளும் அதன் சார்புள்ள அனைத்து விடயங்களும் ஒவ்வொரு இனத்தின் பண்பாட்டுத் தளங்களுள்ளும் கலாசாரத் தட்டுகளிலும் செல்வாக்குச் செலுத்துவதும், அந்தந்த இனத்தின் அடையாள மூலக்கூறுகளாக இருந்து விடுவதும் இயல்பான ஒரு புரிதலுக்குரிய விடயமே. குறித்த இனமொன்றின் இந்த அடையாளங்களோடு வெளிப்படும் இயல்பு நிலையில் கலை இருப்பதனால் தான் இனங்களின் விரிவாக்கத்திற்கேற்ப கலைகளும் பற்பல வடிவங்களோடு உலகில் முகிழ்க்கத் தொடங்கி இன்று ஏராளமான தனித்துவங்களோடு மனிதர்களின் புருவ நுனிகளை உயர்த்தி வியக்க வைத்துக்கொண்டிருக்கின்றன. உலகின் நீண்ட நிலங்களை தமதாக்கிக்கொண்ட வல்லரசுகளாயினும் சரி, பூகோள வரைபடத்தில் குறுகித் தெரியும் சிறிய தேசங்களாயினும் சரி தத்தமக்கென தனியான பாரம்பரியங்களையும், முதிசங்களையும், வரலாறுகளையும், கொண்டமைந்தே இருக்கின்றன. இந்த தனித்துவங்களில் இருந்து வெளிப்படுகின்ற கலைகளும் மற்ற யாவற்றையும் போல தமக்கென தனித்துவமான ஒரு கட்டமைப்பினையே பெரும்பாலும் கொண்டிருக்கின்றன.

ஈழத் தமிழர்கள் நாம் இலங்கைத் தீவென்னும் சிறிய தேசமொன்றின் பூர்வீகக் குடிகளாக பன்நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்ற போதும், எமக்கென ஒரு பாரம்பரிய வரலாற்று நீட்சியினைக் கொண்டிருக்கின்ற போதும், அத் தேசத்தின் பெரும்பான்மைக் குடிகளோடு சமரசம் செய்துகொண்டு எமக்கான சுயங்களையும் அடையாளங்களையும் ஸ்திரப்படுத்திக்கொள்ள பலவற்றோடு போராட வேண்டியிருந்ததை நாங்கள் அறிவோம். அரசியல் அழுத்தங்கள், பொருளாதார நெருக்கீடுகள், கல்விச் சமநிலையின்மைகள், தொழில்சார் சந்தர்ப்பமின்மைகள், கைத்தொழில் போதாமைகள், சுய மொழி அங்கீகாரமின்மைகள், இனச் சுதந்திரமின்மைகள், மதப் பாகுபாடுகள் போன்ற பலவற்றிலுமிருந்து எமக்கான உரிமைகளை மீட்டெடுக்க முனைப்புக் காட்டிய போது ஏற்படுத்தப்பட்ட அழிவுகளில் இருந்து எம்மைக் காப்பாற்றிக்கொள்ள முனைந்ததன் ஒரு விளைவே புலப்பெயர்வாகும்.

யுத்தத்தின் கடும்போக்கால் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்கு முன்பு இருந்து இன்று வரை புலப்பெயர்வில் உள்வாங்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் மக்கள் மட்டுமன்றி, யுத்தத்திற்கு அப்பாலான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்ற பல காரணங்களால் கூட எமது மக்கள் தாயகத்திற்கு வெளியிலான இந்த மேற்குலகோடு தமது வாழ்வுக்கான வெளிகளை அமைத்திருக்கின்றார்கள். அவ்வாறு இவர்கள் அமைத்துக்கொண்ட வாழ்வுக்கான வெளிகள், வெறும் உயிர் வாழ்தலுக்கானதாக மட்டும் இருந்திருக்கவில்லை. மாறாக தமது பண்பாடுகள், கலாசாரங்கள், கலைகள், சடங்கு முறைமைகள், சமய ஆச்சாரங்கள், விழாக்கள், எனப் பலவற்றோடும் மீள் அடையாளமிடப்படுவதாய் தொடரப்பட்டிருந்தது. எமது மக்களால் மீள் அடை யாளமிடப்பட்ட பலவற்றுள் கலைகளுக்கு ஒரு தனியான இடம் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. தாம் வாழும் புதிய தேசத்தில் கலைகளின் தொடர்ச்சியான அளிக்கைகளும், அடுத்த சந்ததியினரை அக்கலைகளில் ஈடுபடுத்தும் ஆர்வமும் ஒட்டுமொத்தமாக புலம்பெயர்ந்த பெரும்பான்மைத் தமிழ் மக்களின் மனநிலையாகவே இருந்து வந்திருக்கின்றது. பரவலான தமிழ் கல்விக்கூடங்களின் பெருக்கமும், அங்கே தமிழ் மொழியினைக் கற்றுக்கொடுத்தலோடு மட்டும் நின்றுவிடாமல் கலை சார்ந்த பயிற்சி வகுப்புகளை நடத்துதலும் இந்த மனநிலையின் வெளிப்பாடுகளாகவே பார்க்கலாம்.

புலம்பெயர் சமூகத்தில் கலை மீதான நாட்டம் என்பது வெறுமனே நுண்கலைகள் சார் பயிலுதல்களோடும், அவற்றிற் கான விலையுயர்ந்த அரங்கேற்றங்களோடும் மட்டுமே திருப்திப்பட்டுக் கொள்கின்ற ஒரு போதாமையாகவே இருந்துகொண்டிருக்கின்றது. இதற்கு அப்பால் சிந்திக்கவோ எமக்கான சுதேசிய, தேசியக் கலைகள் பற்றிப் புரிந்து கொள்ளவோ போதிய அவகாசமற்ற அல்லது அவசியமற்ற ஒரு மனநிலையுடனேயே எம்மில் பலரும் வாழ்ந்து முடித்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால் இன்று நாம் எமது ஈழத்து தமிழ்க் கலை வடிவங்கள் என பூஜித்து தலைமேல் தாங்கும் இந்த நுண்கலைகளிலும் சரி, அவைக்காற்றும் கலைகளிலும் சரி, எத்தனை வீதத்தினது எமது மூலங்களோடும் வேர்களோடும் தொடர்புடைய கலை வடிவங்கள் என்ற தேடல் எமக்கு அவசியமற்றதொன்று என நாம் கருதிக்கொள்கின்றோம். இவற்றுள் பாதிக்கு மேற்பட்டவை இன்று எமது ஈழத்து தமிழ் கலைவடிவம் என்ற அந்தஸ்தினைப் பெற்று எமதுகளுக்குள் உள்வாங்கப்பட்டிருந்தாலும், காலத்தால் முந்திய வரலாறுகளில் அவை புறத்தே இருந்து எமக்குள் தருவிக்கப்பட்ட அல்லது வலிந்து திணிக்கப்பட்ட பலவற்றின் எச்ச சொச்சங்கள் என்பது இங்கு பேசப்பட வேண்டியதொன்று. இந்த கருத்து இந்த துறை சார்ந்த பலருக்கு ஆத்திரத்தை வருவிக்கும் ஒன்றாக இருக்கலாம். ஆனால் எமக்குள் இருக்கும் பல விடயங்கள் இத்தகைய முற்சார்பு ஆத்திரங்களுக்கு அப்பால் தூக்கி நிறுத்தி வியாக்கியானம் செய்யப்பட்டாக வேண்டியிருக்கின்றது.

ஆடல், அடவு போன்ற உடலியக்கம் மற்றும் முகபாவம் போன்றவற்றோடு தொடர்புடைய அவைக்காற்றுகை செய்யும் கலைகளுள் பரதக் கலை புலம்பெயர் சூழலில் மிகப் பிரபல்யமானதாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றது. அது ஒருவகையில் மிக மகிழ்ச்சிக்குரியதே. ஆனால் புறத்தே இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த நடனக் கலை எமது ஈழத்து தமிழருக்கேயுரியதான சொந்த அவைக்காற்றுகைக் கலைவடிவம் ஒன்றை புறந்தள்ளும் அளவுக்கு, அல்லது மறக்கச் செய்யப்படும் அளவுக்கு, இல்லையேல் அப்படி ஒன்று இருப்பதாக அறியமுடியாத நிலைக்கு கொண்டு வந்திருப்பதே இங்கு

கல்லூரி கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

நெருடலான விடயமாகும்.

இக் கட்டுரை பரதக் கலைக்கு எதிரானதல்ல. ஆனால் எமது ஈழத் தமிழ்த் தேசியக் கலைவடிவம் ஒன்றுடன் எமக்கிருந்த உறவினை புலம் பெயர் சமூகத்துடன் மீளவும் ஒட்ட வைக்கும் ஒரு முனைப்பு மட்டுமே.

கூத்துக் கலை அல்லது நாட்டுக்கூத்து கலை வடிவம் என்ற ஒன்று ஈழத்தமிழரால் தொன்றுதொட்டு பாரம்பரியமாக ஆடப்பட்டு வந்து பிற்காலத்தில் வழக்கொழிந்து போகும் நிலையில் இருந்ததென்பதும், இன்று கல்வியியல் ரீதியில் மீண்டும் புத்தாக்கம் கண்டு புதுமெருகுடன் ஈழத்தில் ஆடப்பட்டும், கற்கை நெறியாக பயிலப்பட்டும் வரும் கலைவடிவம் என்பதும் புலம் பெயர்ந்து வாழும் கணிசமான மக்களுக்கு அந்நியமானதொரு தகவலாகவே பெரும்பாலும் இருக்கின்றது. பொதுவாகவே புலம் பெயர்ந்தவர்களின் மனநிலைகளில் இருக்கும் ஒரு இயல்பு நிலை மிகவும் வேதனையுடன் நோக்கத்தக்கதொன்று. தாம் புலம்பெயர்ந்த காலங்களில் எப்படி எமது தேசமும் அத்தேசம் சார்ந்த கலை கலாசார அம்சங்களும் இருந்தனவோ, அப்படியே இன்றும் மாற்றங்காணாது இருக்கின்றது என்ற ஒரு மனப்பாங்கு எம்மில் அதிகமானோருக்கு இருப்பதை நாம் ஏற்றுக்கொண்டாகவேண்டும். அந்த ஒரு பின்னணியில் நின்றுதான் நாடகம், கூத்து போன்ற அவைக்காற்றுகைக் கலை வடிவங்களை இன்றும் படிக்காத, பாமரத்தனமான, வேறு தொழில்களுக்கு தகுதியில்லாத, சிந்திக்கத் தெரியாத மனிதர்களால் நிகழ்த்தப்படுவதாக எம்மில் பலரும் எண்ணிக்கொள்கின்றோம். வளர்ச்சியடைந்த நாடுகள் என நாம் தஞ்சம் கோரி வந்த இந்த தேசங்களில் இத்தகைய அவைக்காற்றுகைக் கலைகள் பெருமதிப்போடு தொழில்சார்ந்த ரீதியில், உயர் கல்வி சார் ரீதியில் நிகழ்த்தப்படுவதையும் கற்கப்படுவதையும் நாம் நன்குணர்ந்தபோதும்கூட எமக்கு எமது சுதேசியம் சார் கலைகளை மதிப்பிற்குரியதொன்றாக கொள்வதில் இன்னும் சிரமம் இருக்கவே செய்கின்றது. அந்த சிரமத்தின் ஒரு விளைவே இந்திய தேசத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு எமதாக்கப்பட்ட பரதத்தின் மீதும் இன்னும் கதகளி, குச்சுப்புடி, கதக் போன்ற பலவற்றின் மீதும் எமது காதலுக்கு ஆயுள் அதிகமாகக் காரணமாயிருக்கின்றது. அதன் மற்றுமொரு விளைவாக, வருமானத்திற்கான வாசலைத் திறந்துவிடாத கலைகளாக எமது கூத்துக்கலை இருப்பதும் குறிப்பிடப்படுகின்றது. விலையுயர்ந்த வகுப்புகள், செலவு மிகுந்த அரங்கேற்றங்கள், வரையறை தாண்டிய குருதட்சணைகள் என்ற வாயில்களினூடு வரும் வருவாய்கள் கூத்துக் கலைக்கு அடைக்கப்பட்டிருப்பதும் இதற்கான காரணங்களாக கொள்ளப்படலாம். மறுபுறத்தே கற்கை நெறியாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நிறுதிட்டமான ஒரு பாடத்திட்ட அலகோ அல்லது வரைவு செய்யப்பட்ட ஒரு ஆடல் பாடலுக்கான ஒழுங்கோ கூத்துக் கலையில் இன்னமும் சரியாக அமைக்கப்படாமையைக் குறிக்கலாம்.

தமிழ்த் தேசியம் பற்றி பெரு வாஞ்சையுடன் வீரியம் கொள்ளும் நாம், குறிப்பாக புலம் பெயர் சமூகம், எமக்கான தேசியக் கலை வடிவம் பற்றி அறிந்து கொள்வதும் அதனை தொழில் சார்ந்த, அந்தஸ்துமிக்க, உயர் கல்வி சார்ந்த ஒரு நிலைக்கு கொண்டு வருவதும் மிக் முக்கியமான ஒரு விடயமாகின்றது. அந்நிலைக்கு இந்த கூத்துக் கலையினை கொண்டு வருவதற்கு அதன் தோற்றம், வளர்ச்சி, பரிணாமம், களம், காவுகை, பரம்பல், முறைமை, பலங்கள், பலவீனங்கள், தடைகள், சவால்கள், சுதேசியப் பண்புகள், தேசிய முக்கியத்துவம் போன்றவற்றை அறிந்து கொள்தலும் ஆய்வுக்குட்படுத்துதலும் மிக அவசியமாகின்றது. அந்த அறிதலும் ஆய்தலும் எமக்கு, குறிப்பாக புலம் பெயர்ந்த தேசங்களில் வாழும் எமது இளம் சந்ததிக்கு இன்று அவசியமாகின்றது. தமக்கான வேர்களைத் தேடி பயணிக்கும் இவர்களது கண்முன்னே விரியும் தமிழ்க் கலைகளாக ஏதொவெல்லாம் தெரிகின்றதே தவிர எமது தனித்துவங்களோடு மறைந்து கிடக்கும் கூத்தும், கும்மியும், அடவும், ஆட்டமும் பார்வைக்கு தரப்படுவதே இல்லை. எனவே எமது பாரம்பரிய கூத்துக் கலையினை புலம் பெயர் தளங்களில் பேச வைப்பதும், பரீட்சயத்திற்கு கொண்டு வருவதும், தூசு தட்டி எம் இளவல்களால் பேணப்பட அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதும் அதனூடாக தமிழ் வளர்ச்சிப் போக்கினை உந்தித் தள்ளிவிட முயலுதலும் இக் கட்டுரை வாயிலான எனது நோக்காக இருக்கின்றது.

## இலங்கையின் பிராந்தியக் கூத்து மரபுகள்

இலங்கையின் தமிழர் பகுதிகள் வழிவழியாக வளர்த்தெடுத்துவந்த தமது முதிசங்களில் கலைகளுக்கு மிக முக்கிய ஒரு வகிபாகமிருக்கிறது என்பதை, வரலாற்றினைப் புரட்டிப் பார்க்கும் எவரும் மறுத்து விடுவதில்லை. அந்தளவுக்கு கலைகளும் தமிழர் வாழ்வும் மிக நேர்த்தியாக கலந்து பயணித்திருக்கின்றது என்றே கூறலாம். இக் கலைகள் பிரதேச ரீதியாகவும், அவர்களது வாழிட மற்றும் தொழில் முயற்சி ரீதியாகவும், சமய நம்பிக்கைகள் மற்றும் ஐதீகங்களின் அடிப்படையிலும், பல மாறுதல்களையும் வேறுபாடுகளையும் கொண்டிருந்தாலும் கலை என்ற வகையில் மிகப் பெரிய ஊடாட்டமாக தமிழ் மக்களிடம் நின்று நிலைத்திருக்கின்றது. கும்மி, மயிலாட்டம், காவடியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், கோலாட்டம், குறவன் குறத்தியாட்டம், போன்ற ஆடலும் பாடலும் இணைந்த கலைத் தொன்மங்களும், வயல்ப்பாட்டு, அருவிவெட்டுப் பாட்டு, கும்மிப் பாட்டு அம்பாப் பாட்டு, வில்லுப்பாட்டு, போன்ற பாடற் கலைகளும் நாட்டுக்கூத்து என்ற அவைக் காற்றுகைக் கலைவடிவமும் தமிழ் மக்களிடம் வாழ்வோடிணைந்த கலைகளாக நீண்ட தொடர்ச்சியைக் கொண்டிருந்திருக்கின்றது.

இவற்றுள் எடுத்துரைப்புக் கலையாக அல்லது அவைக்காற்றுகைக் கலையாக இலங்கையின் தமிழ் பேசும் பல பாகங்களிலும் விரவிக் கிடந்த மிகப் பிரதானமானதொரு கலை வடிவமான கூத்துக் கலை சற்றுக் கூர்மையான அவதானத்துடன் நோக்கப்பட வேண்டியது. ஆடலும் பாடலும் சமதளத்தில் கட்டமைக்கப்பட்டு கதைச் சூல்வு ஒன்றுடன் பின்னிப் பிணைந்தபடி பாத்திரங்களின் கனதிப் பங்களிப்போடு நிகழ்ந்து முடியும் இந்த கூத்து வடிவங்கள் மத்தள முரசங்களோடும் அடவுத் தீர்மானங்களோடும் மக்களின் வாழ்வாய் மாறியிருந்த ஒரு கலை வெளிப்பாடு ஆகும். இலங்கையின் தமிழ் பேசும் பல பிராந்தியங்களில் இக் கூத்துக்கள் அந்தந்த பிராந்தியங்களின் ஒப்புயர்வற்ற தனித்துவமான ஆடல் பாடல் அளிக்கைப் பண்புகளுடன் மக்களிடம் இருந்து பிரிக்க முடியாத ஒரு கலை வடிவமாக இருந்திருக்கின்றது. மலையகம், மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற பூகோள ரீதியான பிரிப்புகளுக்குள்

இந்த கூத்துக் கலையும் அதன் அளிக்கை சார் நுணுக்கங்களோடு தனித்தனியாக துருத்தித் தெரியும் பண்புகளை இயல்பிலேயே கொண்டிருந்திருக்கின்றன.

மலையகக் கூத்து வடிவங்களில் குறிப்பாக காமன் கூத்து அருச்சுணன் தபசு பொன்னர் சங்கர் போன்ற கூத்துக்கள் பிரதான இடத்தினைப் பெற்றிருக்கின்றது. அதேபோல மன்னார் கூத்துக்களில் வடமோடி தென்மோடி வடபாங்கு மன்னார் பாங்கு மாதோட்டப் பாங்கு வாசாப்பு போன்ற வடிவங்கள் தமக்குள்ளே ஆடல் பாடல் என்று யாவற்றிலுமே நுணுக்கமான வேறுபாடுகளுடன் ஆடப்பட்டு வந்திருக்கின்றன. மட்டக்களப்பிலே வடமோடி தென்மோடி கொம்பு முறித்தல் வசந்தன் கூத்து யாழ்ப்பாணத்திலே வடமோடிக் கூத்து தென்மோடிக் கூத்து வசந்தன் கூத்து காத்தவராயன் கூத்து வட்டுக்கோட்டைக் கூத்து போன்றவற்றோடு முல்லைத்தீவிலே தனித்துவமான முல்லைத்தீவுப் பாங்கு என்பனவும் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளெங்கும் விசாலமாகப் பரந்து கிடக்கும் கூத்தின் பிராந்திய வடிவங்களாகும்.

மேற்குறித்த இந்த பிராந்திய கூத்து வடிவங்களில் பல, சமயக் கரணங்களின் தொற்று அல்லது சடங்கு நிலைப்பட்ட அளிக்கை போன்றவற்றில் இருந்து முற்றிலும் விடுபடாத நிலையில் ஆடப்பட்டிருக்கின்றன. இன்றுவரை ஆடப்பட்டும் வருகின்றன. குறிப்பாக காமன் கூத்து அருச்சுணன் தபசு காத்தவராயன் போன்ற கூத்து வடிவங்களைக் குறிப்பிடலாம். இன்னும் சில கூத்துக்களின் ஆரம்பக் கால அளிக்கைக் களமான வட்டக்களரி மற்றும் வட்டக் கொட்டகை போன்ற வெளிகளை விட்டுத் தாண்டிவராத பாரம்பரியம் சார் நிகழ்த்துகை வடிவங்களோடு இன்றும் நிலைத்து வருகின்றன. உதாரணமாக மட்டக்களப்பின் சீலாமுனை மற்றும் கன்னங்குடா போன்ற பிராந்தியங்களில் ஆடப்பட்டு வரும் கூத்துக்களைக் குறிப்பிடலாம். ஏனையவை சடங்கு நிலையில் இருந்து முற்றாக விடுபட்டவையாகவும் பாரம்பரிய நிகழ்த்துகைக் களத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு படச்சட்ட மேடையமைப்புக்கு வடிவமாற்றம் பெற்று வந்த கூத்து வடிவங்களாயும் ஆடப்படுகின்றன. ஆக ஆடுகளங்களிலும் சடங்கு நிலைகளிலும் இந்தக் கூத்துக்கள் ஆங்காங்கே வேறுபடுகின்றனவே தவிர தமக்கான தனித்துவமான நிர்திட்டமான ஆடல் பாடல் தன்மைகளில் பெருமளவான மாற்றமின்றி இன்றும் ஆடப்பட்டு வருகின்றன.

ஆடலும் பாடலும் மேலோங்கி பிரதேசங்கள் தோறும் ஆடப்பட்டு வந்த இத்தகைய கூத்து மரபுகள் கத்தோலிக்க மதம் இலங்கையில் பரவத் தொடங்கிய காலத்தில் இன்னுமொரு அளிக்கை வடிவத்தினை தன்னகத்தே உருவாக்கத் தொடங்கியிருந்தது. போர்த்துக்கீசரின் வருகையோடு இலங்கையின் கரையோரப் பகுதிகளில் மெல்ல மெல்ல பரவத் தொடங்கிய கத்தோலிக்க மதம் தனது பரவலை அதிகப்படுத்தவும் துரிதப்படுத்தவும் தேவையான உபாயங்களை கண்டடைய முனைந்த போது அங்கு ஏற்கனவே மக்களின் வாழ்வாய் அமைந்திருந்த கூத்துக்கலையும் அதன் எடுத்துரைப்புக் கலை வீச்சும் மிக வலிமைபொருந்திய ஒரு உபாயமாக் கொள்ளப்பட்டது. அந்த பின்புலத்தோடு படிப்படியாக கூத்துக் கலை மதப் பிரச்சாரத்துக்கு பயன்படுத்தப்படத் தொடங்கியது. புனிதர்களின் கதைகள் கத்தோலிக்க கடவுளர்களின் அற்புதங்கள் என பலவற்றைப் பாடுபொருளாக கூத்துக்கள் பேச முனைந்த போது இக் கலை ஏற்கனவே தன்னகத்தில் கொண்டிருந்த பிரத்தியேக வடிவத்தில் இருந்து மாற்றம் காணத் தொடங்கியது. புனிதர்களும் கடவுளர்களும் பாத்திரமேற்று பாகமாடத் தொடங்கியபோது கூத்தின் பிரதான இயல்பாக இருந்த ஆட்ட முறைமைகள் தொடர்ச்சியான சரிவைக் கண்டு பாடலின் மேலோங்கிய தன்மை கத்தோலிக்க கூத்துக்களில் முன்னுரிமை பெறத் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக பரிணாமம் கண்ட கூத்துக்களே யாழ்ப்பாணத்தின் கத்தோலிக்க கூத்து மரபுகளாக முகிழ்த்தன. எனவே ஏற்கனவே தமிழ்ப் பகுதிகளில் இருந்த கூத்து மரபுகளோடு கத்தோலிக்க தென்மோடிக்கூத்து மரபும் புதிதான ஒரு பிராந்திய வடிவமாக தனித்துவமாக உருவாகத் தொடங்கியது.

## இலங்கையில் கூத்தின் மீளுருவாக்கம்

20ம் நூற்றாண்டின் ஆரம்பங்களில் இந்திய தமிழ் நாட்டைச் சேர்ந்த சங்கரதாஸ் சுமாமிகளின் விலாசக் கூத்து எனக் கூறப்படும் இசைநாடகப் பாரம்பரியம் நடிகமணி வி.வி.வைரமுத்துவினூடாக இலங்கையில் பரவத் தொடங்கியதோடு அங்கு ஏற்கனவே வழக்கில் இருந்த கூத்துக் கலைகள் மெல்ல மெல்ல வழக்கொழிந்து போகத் தொடங்கியிருந்தன. குழைவான கர்னாடக இசை முதற்கொண்டு கவர்ச்சியான ஆடை அணிகலன்கள் மேடையமைப்புகள் நடிப்பு வெளிப்பாடுகள் என முற்றிலும் புதிய வடிவிலான இந்த இசைநாடகங்களின் பால் மக்கள் லயிப்புப் பெறத் தொடங்கியதோடு கூத்துக் கலை தொடர்பான இரசனைத் தன்மை மழுங்கத் தொடங்கியது எனலாம். அதனைத் தொடர்ந்த காலப் பகுதில் தென்னிந்திய சினிமாத் துறையின் அபரிமிதமான வளர்ச்சியும் தொழில்நுட்ப மாற்றமும் கூட தொடர்ச்சியாக கூத்தின் சரிவுகளில் கணிசமான பங்கை எடுத்திருந்தன. கத்தோலிக்க கூத்து மரபின் தோற்றத்தோடு ஆடல் வடிவத்தினை இழக்கத் தொடங்கிய கூத்துக்கள் இந்த இசை நாடக வரவோடும் சினிமா இரசனையின் பொலிவோடும் போட்டி போட்டு மோதும் ஆற்றலை இழந்ததாக மெல்ல மெல்ல இறக்கத் தொடங்கியிருந்தது என்றுதான் கூற வேண்டும். விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில கிராமங்களுக்குள் மட்டும் தன்னைப் பதுக்கிக்கொண்டு இந்தக் கூத்துக்கள் பொலிவிழந்து கிடந்தமையை கூத்து வரலாறுகள் உறுதி செய்கின்றன.

கிராமங்களுக்குள் இறந்துகொண்டிருந்த இந்த கூத்துக் கலைகள் பற்றிய பிரக்ஞைபூர்வமான அவதானிப்பு பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுடைய காலத்தோடு மீள எழுச்சிபெறத் தொடங்கியது எனலாம். அதே காலப்பகுதியில் சிங்கள பாரம்பரியக் கலை வடிவங்கள் மீதான பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரா அவர்களின் தேடலும் சிங்கள கலைவடிவங்கள் மீதான மீளுருவாக்கமும் தமிழர் கலைகள் பற்றியதான ஒரு விழிப்புணர்வினை தமிழ்ப் பகுதிகளிலும் ஏற்படுத்தியிருக்க வேண்டும். அந்த உணர்வின் ஒரு செயல் வடிமாகத் தான் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுடைய தமிழ்க் கிரா மங்கள் நோக்கிய நகர்வும் கூத்தினை மீளுருவாக்கம் செய்ய முனைந்த முனைப்பும் ஆகும். கூத்துக் கலைகளின் கிராமங்கள் நோக்கிய முடங்குதல்களுக்கும் படிப்படியான இறப்புக்களுக்கும் காரணமான பலவற்றோடு போராடி கூத்தினை மீளத் தூக்கி நிறுத்துவது பேராசிரியர் வித்தியானந்தனின் முன் அப்போது எழுந்து நின்றிருந்த சவால்களாகும். அந்த சவால்களை முறியடித்து கூத்தினை மீள புழக்கத்துக்கு கொண்டு வரும் அவரது முயற்சியின் விளைவு தான் கூத்தின் நாடகப் பிரதிகள் செப்பனிடப்

பட்டமை இசையிலும் ஆடல் பாடல் போன்றவற்றிலும் தெளிவான நிர்திட்டமான வரைமுறைகளை கொண்டு வந்தமை விடிய விடிய ஆடப்பட்ட கூத்துக்களை சுருக்கி நேரக் குறுக்கம் செய்தமை படச் சட்ட அரங்க வடிவத்திற்கு கூத்தினை நெறிப்படுத்தியமை ஒலி ஒளி ஒப்பனை ஆடையமைப்பு போன்றவற்றை திட்டமிட்டு நேர்த்தியாக்கியமை ஆகும்.

மீளுருவாக்கம் செய்யப்பட்ட கூத்துக்களை அந்தந்த பிராந்திய வடிவங்களின் செழுமைகளோடு மீள மீள மேடையேற்றியதோடு கூத்துப் பயிற்சிகளை வழங்கி சமுக புழக்கத்திற்கு கொண்டு வந்த நீண்ட வரலாற்று முயற்சியில் பலரது பங்களிப்பு இருந்திருக்கின்றது. பிராந்திய கூத்து வடிவங்களின் துறை சார் நிபுணர்களாகக் கொள்ளப்படும் அண்ணாவிமார்கள் பக்கவாத்தியக் கலைஞர்கள் நடிகர்கள் போன்ற கலைஞர்களோடு பல அமைப்பியல் ரீதியான நிறுவனங்களுக்கும் இதன் வளர்சியில் கணிசமான பங்கிருந்திருக்கின்றது. இலங்கையின் கிழக்கு பல்கலைக் கழகமும் பேராசிரியர் மௌனகுருவும் திருமறைக் கலாமன்றமும் அருட்திரு மரியசேவியர் அடிகளாரும் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகமும் திரு.செல்லையா மெற்றாஸ் மயில் அவர்களும் இவர்களுடன் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை அவர்களும் அமைப்பியல் ரீதியில் இத்துறை சார்ந்து பேசப்பட்டாலும் இதற்கும் அப்பால் பலரது வீச்சான உழைப்பு இருந்திருக்கின்றது என்பது சற்று விரிவாகப் பார்க்கப்படவேண்டிதொன்றாகின்றது.

### கூத்தின் தேசிய வடிவம் ஒன்றுக்கான அவசியம்

கிராமங்களில் இருந்து தூசு தட்டப்பட்டு மீள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஈழத்து கூத்துக்களின் முன் 2000இன் தொடக்க காலங்களில் மற்றுமொரு சவால் முன்வைக்கப்பட்டது. உலகமயமாதல் பற்றியும் அதன் வீச்சில் சிறுபான்மைச் சமுகங்களின் மொழி மற்றும் பாரம்பரிய முதிசங்கள் இல்லாது போகும் ஆபத்து நிறைந்த சூழலை எதிர்கொள்வது தான் அப்போது அங்கு உருவாகியிருந்த புதிய சவாலாகும். கூத்தினை தேசியமயப்படுத்தல் என்ற புதியதொரு சிந்தனை அக்காலத்தில் மிகப் பரவலாக தீவிரமாக கூத்தின் ஈடுபாட்டாளர்களிடம் பேசுபொருளாகவிருந்தது. தேசிய மயப்படுத்தல் என்றால் என்ன? பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களால் மீளுருவாக்கம் செய்யப்பட்ட கூத்துக் கலையினை எதற்காக தேசியமயப்படுத்த வேண்டும்? தேசிய மயப்படுத்தலால் நாம் அடைய இருக்கும் இலக்கு என்ன? இது எந்த வகையில் உலகமயமாக்கலில் இருந்து எமது கலைகளை காப்பாற்ற உதவி செய்யப் போகின்றது? தேசிய மயமாக்கலை யார் செய்வது? இதில் எந்தெந்த விடயங்களை உள்வாங்கிக் கொள்வது? ஏந்தெந்த விடயங்களைத் தவிர்த்து விடுவது? என்ற பல கேள்விகளோடு இந்த முயற்சிகள் அக்காலத்தில் தீவிரம் காட்டத் தொடங்கியிருந்தது.

ஏற்கனவே சிங்கள பாரம்பரியக் கலைகளின் மீது ஈடுபாடு கொண்டு பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர எடுத்துக்கொண்ட பொறுப்புமிக்க முயற்சியின் பலனாக சிங்கள பாரம்பரியக் கலைகள் ஒருபுறம் செழுமைப்பட்டிருந்தது. அத்தோடு பேராசிரியரின் உதவியோடு அவர்கள் தமக்கான ஒரு சிங்கள பாரம்பரியத் தேசி யக் கலைவடிவம் ஒன்றினையும் அமைத்திருந்ததாகவே வரலாற்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மனமே சிங்கபாகு போன்ற அவைக்காற்றுகளை சிங்கள பாரம்பரியக் கலையின் தேசிய வடிவமாக ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அங்கு அவர்களது அறிவுபூர்வமான சிந்தனை வலுப்பட்டிருந்தது என்றே கூறவேண்டும். சிங்களக் கிராமங்களில் இருந்த பாரம்பரிய ஆடல் பாடல் வடிவங்கள் தமிழ் பகுதிகளில் வழக்கில் இருந்த ஒரு சில முறைமைகள் மற்றும் ஆசியாவின் பல பகுதிகளில் இருந்த வடிவங்கள் போன்றவற்றின் இணைவில் இருந்து ஒரு செழுமைப்பட்ட வடிவத்தினை சிங்கள தேசிய வடிவமாக்கி அதில் பேராசிரியர் சரச்சந்திர வெற்றி கண்டிருந்தார் என்பதே உண்மை. இதை ஒத்ததான ஒரு தேசியக் கலைவடிவத்தினை எமது தமிழ் சமுகத்திற்கும் அமைப்பதன் ஊடாக, கிராமங்களின் இறப்பின் பின்னதான ஒரு வலுவான தேசிய வடிவம் எம்மிடம் பாதுகாப்பாக இருக்க வாய்ப்பிருக்கின்றது என்ற சிந்தனை தமிழ் சிந்தனையாளர்களிடம் முளைவிடத் தொடங்கியிருந்தது. தனித் தனியாக உதிரி உதிரியாக பிராந்தியங்களில் அவைக்காற்றுகை செய்யப்படும் கூத்துப் வடிவங்களில் செழுமையானவைகளை இணைத்து கூத்தின் தேசிய வடிவமொன்றினை அமைப்பது எமக்கு அவசியமானது எனவும் அந்த வடிவம் எம்மை தமிழ் இனம் என்ற பொதுமைக்குள் அடையாளம் செய்யும் கலை வடிவமாக இருக்கும் என்பதும் அப்போதைய பலரின் சிந்தனையாக இருந்தது.

### கூத்தின் தேசிய வடிவம் உருவாவதன் பின்னணியில் இருக்கும் ஆபத்தும் சர்ச்சைகளும்

கூத்தின் தேசிய வடிவமொன்றை உருவாக்குவது என்ற விடயத்திற்கு ஆதரவு இருந்த அதே அளவுக்கு அது பற்றிய எதிர்ப்புணர்வும் விமர்சனப் பார்வையும் கூட தமிழ் சமுகத்திடம் குறிப்பாக அறிவியலாளர்களிடமும் அரங்கவியலாளர்களிடமும் கணிசமாக இருந்தது. 2000களின் நடுப்பகுதிகளில் திருமறைக் கலாமன்றம் ஒழுங்குபடுத்தியிருந்த **கூத்தினை தேசிய மயப்படுத்தல்** என்ற கருப்பொருள் தாங்கிய மாநாடு பல சர்ச்சைகளோடும் வாதப் பிரதிவாதங்களோடும் இடம்பெற்றிருந்தது. உண்மையில் கூத்தின் தேசிய வடிவமொன்றின் உயிர்ப்பு அதன் பிராந்திய வடிவங்களின் இறப்பின் மேல் நடைபெறும் ஆபத்து இருக்கின்றதா என்ற அச்சம் பலராலும் விவாதிக்கப்பட்டது. சுதேசியக் கூத்துகளின் தனித்துவங்கள் அழிந்து விடும் ஆபத்து இந்த தேசிய மயப்படுததலில் காணப்படுகின்றது என்ற ஆதங்கங்கள் அங்கு பதிவு செய்யப்பட்டிருந்தன. கூத்துக்களின் சொந்ததக்காரர்கள் அந்தந்த பிராந்தியங்களின் அண்ணாவிமார்களேயன்றி பேராசிரியர்களோ பல்கலைக்கழக மாணவர்களோ ஆய்வாளர்களோ அல்ல என்ற கருத்துப்பட பல அண்ணாவிமார்கள் விசனங்களை முன்வைத்திருந்தார்கள். தேசிய மயப்படுத்தல் செய்யும் போது சடங்குத் தன்மையிலும் பார்ப்போர் பங்காளர்களாக மாறும் சில கூத்துக்களின் பாரம்பரியங்களிலும் இருந்து அவை விலகிச் செல்லும் அபாயம் ஏற்படும் என்ற சந்தேகங்கள் பல எழுந்திருந்தன. வாழ்வோடு இணைந்த இந்தக் கூத்துவடிவங்கள் வெறும் அவைக்காற்றுகைகளாக மாறி வணிகத்தன்மை மேலோங்கிவிடும் என்ற அச்சம் கூட அங்கு தெரிவிக்கப்பட்டது. மீள் உருவாக்கம் என்ற பெயரில் ஏற்கனவே அது இழந்துவிட்டிருந்த அதன் மரபு இத்தோடு முற்றாக அழிந்துவிடக்கூடும் என ஊகங்களும் தெரிவிக்கப்பட்டிருந்தன. உண்மையில் இந்த ஊகங்களும் அபாயங்களும் ஆதங்கங்களும் இலகுவில் தட்டித் தாண்டிச் செல்லக்கூடிய விடயங்கள் அல்ல என்பதில் காத்திரமான உண்மையிருக்கின்றது. ஆனால் தேசிய வடி

வம் ஒன்றின் தோற்றம் பிராந்திய வடிவங்களின் இறப்பின் மேல் மட்டுமே நடைபெறக்கூடியது என்ற சிந்தனையினை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றே கருதவேண்டியிருக்கின்றது. சுதேசிய அல்லது பிராந்திய வடிவங்கள் தம்மளவில் தமது தனித்தவங்கள் இழக்கப்படாமல் கிராமிய மட்டத்தில் செயற்படும் அதே வேளை ஒரு தேசிய வடிவமொன்றை மறுபுறத்திலே வளர்த்தெடுப்பதில் எந்த சிக்கலும் இருக்கப்போவதில்லை என்பதை இந்த இடத்திலே புரிய வைக்கவேண்டிய தேவை இருக்கின்றது. புறவய ஆபத்தொன்றை இலக்குவைத்து காலத்தின் தேவையாக இந்த முயற்சி இடம்பெறுதல் அவசியமானதொன்றே.

இந்த அவசியத்தை கருத்தில் கொண்டு தாயகத்தில் பலர் தனியாகவும் கூட்டாகவும் நிறுவன ரீதியாகவும் தேசிய வடிவ உருவாக்க முயற்சிகளில் ஈடுபட்டார்கள். குறிப்பாக திருமறைக் கலாமன்றத்தின் ஊடாக சாம் பிரதீபன் அவுஸ்திரேலிய கலைப் பயணத்துக்காக 2000ம் ஆண்டில் தயாரித்து இலங்கையிலும் அவுஸ்திரேலியாவிலும் மேடையேற்றிய 'ஒளியே வருக' என்ற ஓராள் கூத்தளிக்கையினை இதன் முதல் பரிட்சார்த்த முயற்சியாகக் கூறலாம். இலங்கையின் பல பிரதேச ஆட்ட வடிவங்களை ஓரே கூத்தில் இணைத்து ஒரு தேசிய வடிவத்துக்கான கட்டியம் அந்த அளிக்கைக்கூடாக மேற்கொள்ளப்பட்டது. சாம் பிரதீபனின் ' கலவைக் கூத்து' என்று அக் காலப் பகுதியில் கொழும்பு நாளிதள்களில் இக் கூத்தினைப் பற்றி விவாதிக்கப்பட்டிருந்தது. அதே போல திரு.ஜோண்சன் ராஜ்குமாரின் 'கொல் ஈனும் கொற்றம்' 'அற்றைத் திங்கள்' போன்ற கூத்துருவ நாடகங்களினை பொறுப்புமிக்க ஆய்வோடும் தேடலோடும் உருவாக்கப்பட்ட தேசிய மரபுக்கான அடுத்த கட்டப் பாய்ச்சல் என்று கூறலாம். பல பிரதேச கூத்து முறைமைகள் இவற்றுள் உள்வாங்கப்பட்டிருந்தன. பேராசிரியர் மௌனகுரு அவர்களின் 'இராவணேசன்' கூத்து நன்கு திட்டமிட்டு கூத்தின் பல மூலக் கூறுகளையும் நேர்த்தியுடன் அழகியல் செய்து பாத்திரங்கள் ஆடை யமைப்பு இசை எனப் பலவற்றின் பிரம்மிப்புடன் அவைக்காற்றுகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் தேசிய வடிவம் என்ற ஒன்றினை மேற்கொண்டுவருவதற்கு வேண்டிய பல பிராந்திய வடிவங்கள் இதற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கிழக்குப் பகுதியின் குறிப்பாக மட்டக்களப்பு சார்ந்த ஆடல் பாடல் வடிவங்கள் அனைத்தையும் இணைத்ததான கூத்து மரபாகவே இராவணேசன் வெளிப்பட்டு நின்றது. ஒரு தேசிய வடிவத்திற்குரிய அழகியலோடு அமைந்தது என்ற வகையில் இந்த கூத்து காலத்தால் முதன்மை பெற்றிருக்கின்றது.

### ஐரோப்பிய புலம்பெயர் நாடுகளில் கூத்துக் கலை முயற்சிகள்

தமிழ் மக்கள் உயர் கல்வியின் நிமித்தமோ அரசியல் சூழ்நிலை காரணமாகவோ ஐரோப்பிய நாடுகளுக்கு புலம் பெயரத் தொடங்கியபோது தம்முடன் சுமந்தபடி கொண்டுவந்து சேர்த்த பலவற்றுள் கலை கலாசார பண்பாட்டு அம்சங்களுக்கு முக்கியமானதொரு இடமிருக்கின்றது. தாம் காலம் காலமாக வாழ்ந்த இடங்களில் இருந்த தமது தொன்மங்களை எல்லாம் தாம் புலம்பெயர்ந்த நாடுகளிலும் ஊன்றிச் செழிக்க வைப்பதில் தமிழ் மக்கள் எடுத்துக்கொண்ட பிரயத்தனம் அபரிமிதமானது என்றுதான் கொள்ள வேண்டும். இவ்வாறு தூக்கிச் சுமந்து வந்த முதிசங்களில் கூத்துக் கலைகளும் அடங்கியிருக்கின்றன. ஆனால் ஏனைய கலைகளைப் போன்று பாரியதொரு ஈடுபாட்டினையும் கற்றலையும் புழக்கத்திற்கு கொண்டு வரும் முயற்சியினையும் இந்தக் கூத்துக் கலை மட்டில் புலம் பெயர்ந்த தமிழர்கள் செய்யத் தவறியிருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். கூத்தினைப் பார்த்து இரசிப்பதற்கு ஆர்வம் பலரிடம் மிகுந்திருந்தாலும் அதனை நெறிமுறையில் அளிக்கை செய்வதற்கு பெருமளவில் பரீட்சயப்படாத ஒரு சந்ததியினராகவே இங்கிருக்கக்கூடிய பலரும் காணப்படுகிறார்கள்.

தாயகத்தில் கூத்துக்களைப் பார்த்த அனுபவம், ஓரிரண்டு கூத்துக்களில் நடித்த அனுபவம், என தமக்குள் இருக்கக்கூடிய ஈடுபாட்டால் அங்கும் இங்குமாக ஒரு சில கூத்தின் மேடையேற்றத்தோடு திருப்திப்பட்டுக் கொள்கின்ற ஒரு போக்கினையே ஐரோப்பிய கூத்துக்கள் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. முறைப்படி கூத்துக்களை தெரிந்திருப்பவர்கள் கூட தமது முழு ஈடுபாட்டையும் வெளிப்படுத்துவதற்கு பல்வேறுபட்ட பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தாக வேண்டியிருக்கின்றது. மாலை நேரங்களில் ஓய்வுப் பொழுதுகளில் லாவகமாக வந்திருந்து ஒத்திகை பார்த்து மகிழ்வாக கூத்தினை மேடையேற்றும் தாயகச் சூழலை இழந்த நிலையில் பரபரப்பான தேசங்களில் பொருளீட்டல் சுமைகளுடன் ஒரு ஒத்திகைப் பொழுதைக் கண்டுபிடித்தல் என்பதே இங்கு பெரும் சவாலானதொரு விடயமாகின்றது. இருப்பினும் கூட ஒருசிலரது பகீரத முயற்சியினால் கூத்தின் மேடையேற்றங்கள் இங்கும் நிகழ்ந்து முடிந்திருக்கின்றன. குறிப்பாக பாரிஸில் வாழும் பல கூத்துக் கலைஞர்கள் இந்த கூத்தரங்க முயற்சிகளில் முழு ஈடுபாட்டுடன் உழைத்து வருவதை நடப்பியல் வரலாறு உறுதி செய்கின்றது. அரியநாயகம், டேமியன் சூரி, ஆனந்தன், கிருபை போன்றவர்களோடு இன்னும் பல கலைஞர்கள் பல கூத்துக்களை மேடையேற்றியதோடு பல கூத்துப் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. வட மோடி, தென் மோடி, மன்னார் மாதோட்ட பாங்கு, காத்தவராயன், வட்டுக்கோட்டை மரபு போன்ற கூத்து வடிவங்கள் இவர்களால் தொடர்ச்சியான மேடையேற்றங்களைக் கண்டு வருகின்றது. இவர்களுடைய கூத்து வடிவங்கள் தாயகத்தில் இருந்து முற்றாக வேறுபட்டு புதிய ஆற்றுகைக் களங்களில் மேடையேற்றம் கண்டு நிற்பதோடு முற்று முழுதாக சடங்குத் தன்மையில் இருந்து விடுபட்டு ஒரு அளிக்கை முயற்சியாக மட்டுமே நிலைபெற்றிருக்கின்றது. கூத்துப் பிரதியையும் கதைக் கருவினையும் தவிர மற்றெல்லா அம்சங்களிலும் இந்த ஐரோப்பியக் கூத்துக்கள் வேறுபட்டே நிற்கின்றன.

### புலம்பெயர் தேசங்களில் கூத்தின் தேசிய மரபொன்று அமைவதற்கான தேவை

பல்லின, பல் கலாசார, பன்மொழிப் புழக்கம், பல பண்பாட்டு அம்சங்கள் நிறைந்த புலம் பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு பல புதிய விடயங்கள் சவால்களாக இருக்கின்றன. தம்மை அடையாளம் செய்வதற்கும், தாம் யார் என்பதை பல்லினங்கள் மத்தியில் முகவரி செய்வதற்கும் தமிழ் மக்களுக்கு இங்கு ஒருவித தனித்துவம் தேவையாக இருக்கின்றது. அந்த தனித்துவத்தை மொழியிலும் உடையிலும் கலாசார விழாக்களிலும் கலைகளிலும் வெளிப்படுத்தி

திருப்தி காண்கிறார்கள். அந்தவகையில் தம் இனத்தை அடையாளம் செய்யும் கலைகளுள் முதன்மையானதாக அமைய வேண்டிய கூத்துக் கலை பற்றிய பரீட்சயம் இவர்களிடம் மிக மிக குறைவானதாகவே இருக்கின்றது. இந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்து கொள்வதற்கு தொடர்ச்சியான கூத்து மேடையேற்றங்களும், கூத்துக் கலையில் ஈடுபடுதலும் மிக அவசியமாகின்றது. ஆனால் தாயகத்தை விடவும் சவால்களால் சூழப்பட்டுள்ள மேற்புலத்து வெளிகளில் கூத்துக்கான ஈடுபாட்டாளர்களை கண்டடைவதும், பார்வையாளர்களை சேகரிப்பதும் மிகச் சிரமமானதொன்று என்பதை நாம் அறிவோம். அந்த சிரமங்களை உடைத்து கூத்துக் கலையினை இந்த மண்ணில் மீள நடுவதற்கு கூத்தின் மேல் மூன்று முக்கிய செயற்பாடுகளை அவசரமாகவும் அவசிமாகவும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

1. பனியும் பனி சார்ந்த இடங்களும் எனச் சொல்லப்படுகின்ற ஆறாம் திணைப் புலமான புலம் பெயர் நாடுகளின் சமகாலப் போக்குக்கு ஒத்திசைவாக கூத்தினை மீளவும் மீளுருவாக்கம் செய்தல்.

2. இலங்கையின் பிராந்திய கூத்து வடிவங்கள் அனைத்திலும் இருந்து உயிர்ப்புப் பெற்றதான ஒரு தேசிய வடிவம் ஒன்றினை அதியுச்ச பொறுப்புணர்வுடன் உருவாக்கிக் கொள்ளுதல்.

3. கல்வியியல் ரீதியில் இந்த தேசிய கூத்து மரபினை தரமுயர்த்துவதோடு அறிமுறை செயன்முறை என கற்றலுக்கான ஒரு நிர்திட்டமான பாடத்திட்ட அலகுகளை உருவாக்கிக் கொள்ளுதல்.

இந்த மூன்று விடயங்களும் சார்பு நிலையற்று நடந்தேறி முடிகின்ற போது, கூத்து உலகத் தரத்தில் எம்மை அடையாளம் செய்யும் ஓர் உன்னதக் கலையாக முகிழ்க்கும் வாய்ப்புக்கள் நிறைந்து கிடக்கின்றன.

பேராசிரியர் வித்தியானந்தன் செய்த கூத்து மீளுருவாக்கத்திற்குப் பின்னர் மக்கள் இரசனையிலும், சிந்தனைத் திறனிலும், படைப்பாக்க ஆளுமையிலும், நிறையவே மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டது. தொழில் நுட்ப சாதனங்களின் இலகுத் தன்மையும் மிக விரைவான தகவல் தொழில்நுட்ப புரட்சியும் மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களைப் போலவே கலைகளின் பரிணாமத்திலும் கணிசமான செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றது. இந்தப் போக்கு புலம் பெயர்ந்த நாடுகளில் இன்னும் பலமான வீச்சான தாக்குதிறனாக மக்களையும் கலைகளையும் புரட்டிப் போட்டிருக்கின்றது. இந்த பூகோள ரீதியான மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளாது பயணம் மேற்கொள்ளின், கூத்துக் கலையினை காலம் காவு கொள்ளும் ஆபத்து நிச்சயமானதாகிவிடும். எனவே இலங்கைத் தமிழரின் தனித்துவ மான அடையாளமாக நாம் ஒரு கலையை தூக்கி நிறுத்திக் காட்ட விரும்புகின்றோம் என்றால், கூத்துக் கலையினைத் தாண்டி நாம் வேறெங்கும் சென்றுவிடமுடியாது. அப்படி நாம் தூக்கி நிறுத்தும் கூத்துக் கலை தனக்கானதொரு தேசிய வடிவத்தினைப் பெற்று கல்வியியல் ரீதியில் தன்னை விசாலப்படுத்திக் கொள்ளாதவரை, நாம் இரவல் கலைகளை எமக்குரியதாய் மார்தட்டிக் கொள்ளும் மனிதர்களாய் ஆறாம் திணைப்புலத்தில் வாழ்வதை தவிர்த்துவிட முடியாது.

**சாம் பிரதீபன்**
**இயக்குனர்**
**தமிழ் அரங்கியல் காணொளிக் கலை மன்றம்**

# 'யாழ் ரத்னா" விருது பெற்ற
## திருமறைக்கலாமன்ற கலைஞன்

அண்மையில் எமது மன்றக் கலைஞரான திரு. அந்தோனிப்பிள்ளை யோசெப்(குருநகர்) அவர்கள் யாழ் பிரதேச செயலகத்தினால் "யாழ் ரத்னா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கடந்த 45 வருட காலமாக திருமறைக் கலாமன்றத்தின் அரங்க காட்சி விதானிப்புகளை பொறுப் புடன் கவனித்துவரும் திரு.யோசெப் அவர்கள் தனது பட்டறிவினால் கலையின் பல பரிமாணங்களை தொட்டவர். ஆரம்பகாலத்தில் காட்சியமைப்புக் குழுவின் அங்கமாக செயல்பட்ட அவர் படிப்படியாக வளர்ந்து இன்று திருமறைக்கலாமன்றத்தின் பல நாடகங்களுக் கும் காட்சி, மேடை, ஒலி, ஒளி விதானிப்பாளராக செயற்பட்டு வருகின்றார். மேடையேற்ற நிகழ்வுகளின் போது ஏற்படக்கூடிய பல சிக்கலான சந்தர்ப்பங்களில் கூட தனது பட்டறிவைக்கொண்டு ஆற்றுகைக்கு தடை ஏற்படாத வகையில் அவற்றை சீர் செய்து, ஆற்றுகையை வெற்றிப்பாதையில் நகர்த்திச் செல்லும் திறமைவாய்ந்தவர். அவரது



இத்தகைய திறமைகளை கண்டு பாராட்டியோர் பலர். அவர் வெறும் பின்னணிக் கலைஞராக மாத்திரம் இல்லாது நடிகர்கள் ஆற்றுகைக்கு வரத் தவறும் பட்சத்தில் அந்தப் பாத்திரங்களை ஏற்று நடிக்கும் வல்லமைகொண்ட துணை நடிகராகவும் இருந்திருக்கிறார். அது மாத்திரமல்ல அவர், சில நாடகங்களை தயாரித்து இயக்கி மேடையேற்றி பலரது பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறார். பாடசாலை மாணவர்கள் மத்தியில் மீனவ மக்களின் மரபுவழித் தொழிற்கலையான "அம்பா" பாடலை நடிப்புருவில் கொண்டுவந்து அதனை பழக்கி மேடையேற்றிய பெருமை இவரையே சாரும். சாவகச்சேரி இந்துக்கல்லூரி அரங்கம், கலைத்தூது கலையகம் ஆகியவற்றை புனரமைத்து பல அரங்கத் திரைச்சீலை வடிவங்களை அமைத்துக்கொடுத்து பாராட்டும் பெற்றுள்ளார். உரோமைய மற்றும் எபிரேய பின்னணியில் அமையும் காட்சிகளை அக்கலாச்சாரத்தின் அடிப்படையில் 150அடிக்கு மேற்பட்ட நீளமான மேடையில் அமைத்து திருமறைக்கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சிக்கு அழகு சேர்த்து பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார். இவரது கலைச்சேவைக்காக "அரங்க ஆற்றுகையாளன்" என்ற விருதும், திருமறைக்கலாமன்றத்தின் அதிஉயர் விருதான "**கலைஞான பூரணன்**" என்ற விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல் அண்மையில் யாழ் பிரதேச செயலகத்தால் "**யாழ் ரத்னா**" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். பெரும்பாலும் மேடை நடிகர்களை பாராட்டி கௌரவிக்கும் எமது சமூகம் ஒரு சில மேடைக்கு பின்புலம் இருந்து பணியாற்றும் கலைஞர்களை பாராட்ட முன்வந்திருப்பது போற்றுதற்குரியதே. அதில் திரு.யோசெப் அவர்களும் "யாழ் ரத்னா" எனும் பட்டத்தின மூலம் இணைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. "முற்றம்" சஞ்சிகையும் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றது.

# ஆச்சி மனோரம்மா அமரானார்



தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் 1943ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் தேதி பிறந்தவர் நடிகை மனோரமா. அவரது இயற்பெயர் கோபிசாந்தா. அவருடைய குடும்பம் மன்னார்குடியில் இருந்து காரைக்குடி அருகேயுள்ள பள்ளத்தூருக்கு இடம்பெயர்ந்தது. குடும்பச்சூழல் காரணமாக 12 வயதிலேயே மேடை நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். நாடக நடிகையானபோது அவருக்கு மனோரமா என்கிற பெயர் சூட்டப்பட்டது. நடிப்பு, பாட்டு, வசன உச்சரிப்பு, நடனம் என்று அனைத்திற்காகவும் அவர் நாடக உலகில் பாராட்டப்பட்டார்.

வைரம் நாடக சபா உள்ளிட்ட தொழில்முறை நாடக நிறுவனங்கள் பலவற்றில் நடித்துக்கொண்டிருந்த மனோரமாவை மேடை நாடகக் கலைஞராக பெரிய அளவில் அடையாளம் காட்டியது திராவிட இயக்கத்தின் பிரச்சார நாடகங்கள்தான்.

திமுக நிறுவனர் அண்ணா, மு.கருணாநிதி, எஸ் எஸ் ராஜேந்திரன் உள்ளிட்ட பல முன்னணி திராவிட இயக்கத்தலைவர்களுடன் அவர் மேடை நாடகங்களில் நடித்தார். அவரது தெளிவான வசன உச்சரிப்பும், உச்சஸ்தாயியில் அநாயாசமாக பாடும் வல்லமையும் அவருக்கு ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுத்தந்தன.

மாலையிட்ட மங்கையாக திரைப்படத்துறைக்குள் வந்தார் நாடக நடிகையாக இருந்த மனோரமாவை கவியரசு கண்ணதாசன் திரையுலகில் அறிமுகம் செய்தார். கண்ணதாசன் தயாரித்து 1958ஆம் ஆண்டு வெளியான "மாலையிட்ட மங்கை" என்கிற திரைப்படத்தில் அறிமுகமானார் மனோரமா.

மனோரமா முதன்முதலில் கதாநாயகியாக நடித்த திரைப்படம் "கொஞ்சும் குமரி". மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம் தயாரித்து 1963ஆம் ஆண்டு வெளியானது இந்த திரைப்படம். Image caption நகைச்சுவைக்கு மட்டுமல்ல நவரச நடிப்புக்கும் அவர் அரசி என்பது விமர்சகர்கள் கருத்து

அதேசமயம் மனோரமா என்ற மாபெரும் நடிகையின் நடிப்புத்திறன் பெரிதும் வெளிப்பட்ட முக்கிய திரைப்படமாக தில்லானா மோகனாம்பாள் படத்தையே திரை விமர்சகர்கள் இன்றளவும் குறிப்பிடுகிறார்கள்.

அந்த திரைப்படத்தின் கதாநாயகன் சிக்கல் சண்முகசுந்தரமாக நடித்த சிவாஜிக்கும், திருவாரூர் மோகனாம்பாளாக நடித்த பத்மினிக்கும் சற்றும் சளைக்காமல், "ஜில் ஜில் ரமாமணி" என்ற நகைச்சுவைக் கதாபாத்திரத்தில் மிகச்சிறப்பாக நடித்துப் பாராட்டைப் பெற்றார் மனோரமா.

**ஜில் ஜில் ரமாமணியாக சிரிக்கவைத்தார்.**

ஜில் ஜில் ரமாமணி கதாபாத்திரம் நகைச்சுவை நடிகையாக மனோரமா புகழ் பதித்த பல திரையுலக பாத்திரங்களில் முக்கியமானதாக இன்றுவரை பேசப்படுகிறது. அரை நூற்றாண்டுகாலம் தமிழ்த் திரையுலகின் கதாநாயகர்கள், நகைச்சுவை நடிகர்கள், குணச்சித்திர நடிகர்கள் ஆகியோருக்கு ஈடுகொடுத்து நடித்து புகழ் பெற்றவர் மனோரமா.

Image caption ஜில் ஜில் ரமாமணியாக வந்து இன்றளவும் சிரிக்க வைத்தவர்

அவர் திரைத்துறையில் அறிமுகமானபோது தமிழ்த்திரையுலகின் முடிசூடா மன்னர்களாக திகழ்ந்த சிவாஜி, எம்.ஜி.ஆர் படங்களில் துவங்கி கமல், ரஜினிபடங்களில் அவர்களுக்கு போட்டி போட்டு நடித்தவர், நாகேஸ், சோ, தேங்காய் சீனிவாசன், தங்கவேலு, சுருளிராஜன், கவுண்டமணி எனப் பல நகைச்சுவை நடிகர்களுடன் நடித்தவர், பாக்கியராஜ், சத்யராஜ் என்று பலதரப்பட்ட நடிகர்களுடனும் நடித்திருக்கிறார் மனோரமா. நகைச்சுவையாக மட்டுமல்லாமல் குணச்சித்திர வேடங்களிலும் மனோரமாவின் நடிப்பு முத்திரை பதித்தது. தனித்துவம் வாய்ந்தது.

நகைச்சுவைக்கு மட்டுமல்ல நவரசங்களுக்கும் நாயகி என பாராட்டப்பட்டார்

நகைச்சுவை நடிப்போடு அவரது தனித்துவமான குரலில் பாடிய நூற்றுக்கணக்கான பாடல்களும் இன்றளவும் ரசிகர்கள் நினைவில் நிற்பவை. மனோரமாவைத் திரையில் முதலில் பாட வைத்தவர் இசையமைப்பாளர் ஜி.கே. வெங்கடேஸ். மகளே உன் சமத்து என்ற படத்தில் "தாத்தா.. தாத்தா பிடிகொடு". இந்த தள்ளாத வயசிலே "சடுகுடு" என்று எல்.ஆர்.ஈஸ்வரியுடன் சேர்ந்து பாடினார் மனோரமா.

Image caption குணச்சித்திர வேடங்களிலும் அவர் கோலோச்சினார். பொம்மலாட்டம் படத்தில் வி.குமாரின் இசையில் "வா.. வாத்யாரே வூட்டாண்ட.. நீ வராங்காட்டினாவுடமாட்டேன் என்று சென்னை வழக்கில் மனோரமா பாடிய பாடல் கருந்தேள் கண்ணாயிரம் படத்தில், "பூந்தமல்லியிலே ஒரு பொண்ணு பின்னாலே.. நான் போயி வந்தேன்டி அவ பொடவ நல்லால்லே.." என்று அவர் பாடிய பாடல் பாட்டி சொல்லைத் தட்டாதே படத்தில் சந்திரபோஸ் இசையில், "டெல்லிக்கு ராஜான்னாலும் பாட்டி சொல்லைத் தட்டாதே" என்ற பாடல் ஏ.ஆர். ரஹ்மான் இசையில் மே மாதம் படத்தில், "மெட்ராஸை சுத்திப்பார்க்கப் போறேன்" என்கிற பாடல் என மனோரமாவின் கம்பீரமான குரலில் ஒலித்தபாடல்கள் இன்றளவும் பிரபலமாக இருக்கின்றன.

**ஆயிரம் படங்களைத்தாண்டிய ஆச்சி**

தமிழ் தவிர தெலுங்கு, மலையாளம், இந்தி உள்பட 1000 படங்களுக்கு மேல் நடித்து கின்னஸ் சாதனை படைத்திருப்பவர் மனோரமா. அவர் நடித்த நாடகங்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்திற்கு அதிகம். திரைப்படத்துறையில் முன்னணி நடிகையாக இருந்தபோதும் அவர் மேடை நாடகங்களில் தொடர்ந்து நடித்தவர். அவர் நடித்த மேடை நாடகங்களின் எண்ணிக்கை 5000 வரை இருக்கலாம் என்றும் சில புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

இது தவிர பல வானொலி நாடகங்கள், தொலைக்காட்சித் தொடர்களிலும் மனோரமா நடித்திருக்கிறார். உலகின் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் நாடகங்களும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தியவர் அவர். இந்திய அரசிடமிருந்து பத்மஸ்ரீ, சிறந்த குணச்சித்திர நடிகைக்கான தேசிய விருது, தமிழக அரசின் கலைமாமணி விருதுகளுடன் ஏராளமான திரைத்துறைக்கான விருதுகளையும் மனோரமா பெற்றிருக்கிறார்.

ஐந்து முதல்வர்களுடன் நடித்தவர்

Image captionஐந்து முதல்வர்களுடன் நடித்தவர் மனோரமா திமுக நிறுவனர் சி.என்.அண்ணாதுரை, மு.கருணாநிதி, அதிமுக நிறுவனர் எம் ஜி ராமச்சந்திரன், ஜெ.ஜெயலலிதா, ஆந்திராவின் தெலுகு தேசம் நிறுவனர் என்.டி.ராமராவ் என ஐந்து முதல்வர்களுடன் நடித்தவர் மனோரமா. சுமார் 50 அண்டு காலம், ஆயிரம் திரைப்படங்களுக்கும் மேலாக நடித்திருக்கிறார். மிகச்சிறந்த நடிப்பாற்றல், தெளிவான வசன உச்சரிப்பு, கணீர் குரலில் பாட்டு என அவரது பன்முகத்திறமைகள் அவரை சுமார் அரை நூற்றாண்டுகாலம் திரையுலகில் அசைக்க முடியாத ஆளுமையாக வைத்திருந்தது.

தமிழ் திரைப்படத்துறையில் கலைவாணரில் தொடங்கி இன்றைய இளம் நகைச்சுவை நடிகர்கள் வரை ஆண் நகைச்சுவை நடிகர்களுக்கு என்றொரு தொடர்ச்சியான நெடிய பாரம்பரியம் உண்டு. ஆனால், நகைச்சுவை நடிகைகளுக்கு அப்படியானதொரு தொடர்ச்சியான பாரம்பரியம் இல்லை என்கிற விமர்சனம் உண்டு. தமிழில் நகைச்சுவை நடிகைகளின் எண்ணிக்கை குறைவு என்பது மட்டுமல்ல, நகைச்சுவை நடிகைகள் நீடித்து நிலைப்பது ,ல்லை. நகைச்சுவைக்கென வரும் நடிகைகள் குறைவான காலத்தில் கிடைக்கும் வாய்ப்புகளில் பிரகாசித்து விட்டு ஒதுங்கிவிடுவார்கள்.

ஆனால், மனோரமா அதிலும் மாறுபட்டவர். பெருமளவு ஆண்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதொரு துறையாக வர்ணிக்கப்படும் தமிழ்த்திரைப்படத்துறையில் அரை நூற்றாண்டுகாலத்திற்கும் மேலாக அசைக்கமுடியாத நடிகையாக நிலைத்திருந்தவர் ஆச்சி என்று அன்பு கலந்த மரியாதையுடன் அழைக்கப்பட்ட நடிகை மனோரமா. அவரின் புகழ் அடுத்த நூற்றாண்டிலும் பேசப்படும் என்கிறார்கள் திரை விமர்சகர்கள்.

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# மந்திரங்களின் மகிமை

சுழி.சி.கிருஷ்ணன்

சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருபோதும் இல்லை(ஒளவையார்). இது மந்திரம் என வழங்கப்படுகிறது. இவ் ஐந்தெழுத்து மூன்று வகையாகக் குறிப்பிடப்படுகிறது. சிவாயநம என்னும் ஒலியை இடம் மாற்றி அமைப்பதனால் இன்னொருவிதமான ஒலி அலைகள் நமக்குக் கிடைக்கிறது. அவ்வாறு கிடைப்பதை ஸ்தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்று வகைப்படுத்தினர். இம் மந்திரத்தின் பெருமையை சைவசமய குரவர்களும் சந்தான குரவர்களும் அருளிச் செய்த தோத்திர சாஸ்திரங்களில் பார்க்கலாம். "சொல்வாரேனும் குணம்பல நன்மைகள் இல்லா பரனும் இயம்புவராயின் எல்லாத் தீங்கையும் நீக்குபவர் என்பவரால் நல்லார் நாமம் நமச்சி யாயவே என்பதனாலும்" "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்பதிலும் "ஐந்தெழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்" என்பதிலும் காணலாம். மணிவாசகனார் சிவபுராணத்தில் "நமச்சிவாய" என்றும் தொடங்குகின்றார்.

**சிவசிவ என்கிலர் தீவினையாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்**
**சிவசிவ என்றிடத் தேவரு மாவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே**(திருமந்திரம்)

மந்திரங்களை உருவாக்கியவர்களை நிறைமொழி மாந்தர் என்று தொல்காப்பியனார் அடையாளம் காட்டுகிறார்.

**"நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம்"**

நம்முடைய முன்னோர்கள், பெரியவர்கள், ஞானிகள், தபசிகள், ரிஷிகள், முதலானவர்கள் மெஞ்ஞானிகளாகத் திகழ்ந்ததோடு விஞ்ஞானிகளாகவும் திகழ்ந்தனர். இதனால்த்தான் ஒலியின்(sound) சிறப்பை, ஆற்றலை, பெருமையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அறிந்திருந்தனர். ஒவ்வொரு எழுத்திற்கும் உச்சரிக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட அதிர்வு(Frequency) உள்ளது. இவ்வாறு எழுப்பப்படும் ஒலியை(Hertz) என்ற அளவினால் கணக்கிடுவர். ஐயாயிரம் ஹெர்ட்ஸ்க்கு குறைந்த ஒலிகளையும் இருபத்திஇரண்டாயிரம் ஹெர்ட்ஸ்க்கு மேற்பட்ட ஒலிகளையும் நம் காதுகளால் கேட்க முடியாது. ஆனால் ஆகக்குறைந்த ஒலிகளை எலிகள் கேட்கும். அதிமிகு ஒலிகளை கேட்கும் திறன் கொண்டவை நாய்கள். ஆனால் ஒலி மாபெரும் சக்தியுடையதென்பதை இன்றைய விஞ்ஞானம் நமக்கு விளக்கிக் காட்டுகிறது. மிகு அதிர்வு ஒலி என்னென்ன செய்கிறது என்பதை நாம் காண முடிகிறது. மசகு எண்ணெயில் (Lubricant) நன்றாக ஊறிய ஒரு துணியை வேறு வழிகளில் சலவை செய்ய முடியாது. ஆனால் நீர் நிறைந்த கண்ணாடித்தொட்டிக்குள் அதனைத் தொங்க விட்டு வெளியே மிகு அதிர்வு ஒலியை(Ultrosound) உண்டாக்கி அத்தொட்டியின் பக்கம் செலுத்தினால் துணியிலுள்ள அழுக்கு நீக்கப்பட்டுத் துணி தூய்மை அடைகிறது. துணியைப் பற்றிய நீக்கமுடியாத எண்ணெய்ப்பசையுடன்கூடிய அழுக்கையே புறத்தில் உண்டாக்குகிற மிகு அதிர்வு ஒலி போக்குகிறது என்றால், மனித மனத்திலுள்ள அழுக்கை மனமாசை ஏன் அந்த ஒலி போக்க முடியாது. ஒலியின் சிறப்பை அறிந்த நம் முன்னோர் மனமாசைப் போக்க இவ் ஒலிகளைப் பயன்படுத்தினர்.

எல்லா அசைவுகளும் ஒலியை உண்டாக்கும். ஒலியுண்டாக்காத பொருளே உலகில் இல்லை. ஒளியானது ஒருமுகப்படுத்தப்படாமல் இருக்கும் போது அதற்குக் குறைந்த ஆற்றலே உண்டு. சிதறிச் செல்கின்ற ஒளியை ஒருமுகப்படுத்தி செலுத்தும் ஒளியானது இரும்பைக்கூட ஊடறுத்துச் செல்லும் ஆற்றலுடையதென இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது. இவ்வாறு செல்லும் ஒளியை லேசர்(Laser) என்று விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். இதே செயலைத் தான் நம் முன்னோர்கள் ஒலியைப் பயன்படுத்திச் செய்தனர்.

ஓம், கம், சௌம், ஹ்ரீம், க்லீம் என்பன போன்ற மந்திரங்களுக்கு எவ்விதப் பொருளும் இல்லை. பொருள் இல்லாவிட்டாலும் இம் மந்திரங்கள் ஒருமுகப்படுத்தப்பட்ட அதிர்வெண்களைக் கொண்ட எழுத்துக்களின் சேர்க்கை. இதனால்த்தான் மிகு அதிர்வு ஒலியின் பயனை விளை விக்கின்றன. இதேமாதிரியான செற்கட்டுக்களை கந்தசஷ்டி கவசம், திருப்புகழ் போன்ற நூல்களிலும் அருளாளர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ரரரர ரரர ரரரர ரரர
ரிரிரி ரிரிரி ரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு

டிகுடகு டிகுடிகு டங்கு டிங்கு என்பதுவும் முத்தை தரு எனவரும் திருப்புகழில் வரும் குக் குக்ககுகூ சொற்கூட்டத்தைக் காணலாம்.

இவ்வாறான சொற் கூட்டங்களின் ஒலிகள் மனித மனங்களிலுள்ள மனமாசை அகற்றுகின்றன.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற** என்கிறார் வள்ளுவப்பெருந்தகை. இன்று உலக மாந்தரைப் பிடித்து ஆட்டும் மன இறுக்க மானது மனத்துக்கண் தோன்றிய மாசு காரணமாகத் தோன்றியதாகும். இதனைப் போக்குவதற்காகவே இம் மந்திரங்களை நம் முன்னோர் தோற்றுவித்தனர். போட்டியும் வேக மும் நிறைந்த வாழ்க்கையில் ஈடுபட்ட நாம் நம் முன்னோர் கூறிய வழியைச் சிந்திக்க மறந்தது மட்டுமல்லாமல் மறுத்தும் வருகின்றோம்.

உணர்வு வளர்ச்சியாலேதான் மனிதனுடைய மனம் நிறைவடையவேண்டும். எத்துனை அறிவை வளர்த்துக்கொண்டு போனாலும், மனம் நிறைவ டையாது. இது கருதியே தாயுமானவர் "**சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும் மனம் இறங்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே**" என்கிறார்.

20ம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார் "பல கற்றும் பல கேட்டும் முத்துமாரி அம்மா பயனொன்றும் இல்லையடி முத்துமாரி அம்மா... தோல் வெளுக்க சாம்பலுண்டு முத்துமாரி அம்மா, துணிவெளுக்க மண்ணுண்டு முத்துமாரி அம்மா, மணிவெளுக்கச் சாணை யுண்டு முத்துமாரி அம்மா, மனம்வெளுக்க வழியில்லையே முத்துமாரி அம்மா என்று நொந்து கொள்கிறார். இவ்வாறு ஏன் அவர் நொந்துகொண்டார் என்பதனைச் சிந்திக்க வேண்டும். புற வளர்ச்சி அடைந்துள்ள மனிதன் அகவளர்ச்சி அடையவில்லையே என்ற கவலைதான் அவரை ஆட்டிப்படைத்துள்ளது.

இன்றைய உலகில் வாழும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் அனைத்து மக்களிடமும் காணப்படுவது மன இறுக்கம்(Mental Tension) என்பதாகும். இவற்றை நீக்கவே நம் நிறைமொழி மாந்தர் இம் மறைமொழிகளாகிய மந்திரங்களை உருவாக்கினர். "**உன்னைத் திருத்திக்கொள் உலகம் தானாகத் திருந்திக்கொள்ளும்**" இயேசுபிரான். தனிமனிதனை மனமாசு அற்றவனாக மாற்றினால் சமுதாயம் தானே திருந்தும் என்பதே மறைதெழிமாந்தர் கண்ட உண்மை யாகும். மன இறுக்கம் என்பது மனத்துக்கண் தோன்றிய மாசு காரணமாகத் தோன்றியதாகும். கெட்ட எண்ணங்கள் மனதில் தோன்றினால் பயப்படவேண்டிய அவசியம் இல்லை, சோர்ந்துவிட வேண்டியதில்லை. இந்த எண்ணங்களைக் கெட்ட உந்துவேகங்களிலிருந்து பிரிக்க வேண்டும். இதற்கு ஆன்ம ஆராய்ச்சி மிகவும் அவசியம். எண்ணங்களை மந்திரங்களின் உதவியுடன் சுயேச்சையாகப் பிரிப்பதன் மூலம் ஆன்மாவையும் மன உருவங்களையும் பிரித்துவிட்டால் இந்த உருவங்கள் காற்று இழந்த பலூன் போலச் சுருங்கி, உயிரற்றவைபோல் உணர்விழந்து மறைந்து விடுகின்றன.

மனத்தூய்மை அடைவதற்குச் சிலவற்றை ஒதுக்கவேண்டும் என்கிறார் இராமலிங்கவள்ளல்.

**காம உட்பகைவனும் கோபவெங் கொடியனும்**
**கனலோப முழுமூடனும்**
**கடுமோக வீணனும் கொடுமதம் எனுந் துட்ட**
**கண்கெட்ட ஆங்காரியும்**
**ஏமம் அறு மாச்சரிய விழலனும் கொலையென்**
**றியம்புபா தகனுமாம்இவ்**
**எழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்**
**எனைப் பற்றிடாமல் அருள்வாய்**

தனிமனிதன் மனம் அடங்கக் கற்கும் கல்வி யைக் கற்கவேண்டும். கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள், இல்லாதவர்கள் என்ற வேறுபாடு இன்றி எல்லோரும் மன இறுக்கம் இல்லாமல் வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர். எனவே மந்திரங்களைப் பயன்படுத்துவது இன்றைய சமுதாயத்தில் அனைவருக்கும் மிகமிக இன்றியமையாத ஒன்றாகிறது. சாதாரண ஒலிகளைத்தான் இவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். இவை எவ்வாறு மந்திர ஒலிகளாக மாறுகின்றன. நிறைமொழி மாந்தர்கள் இவ் ஒலிகளை தமது ஆற்றல் காரணமாக, தம்முடைய சக்தி முழுவதையும் அந்தச் சொற்களில் ஏற்றி, இவை மந்திரங்களாக ஆகக்கடவன் என்ற ஆணையிடுகிறார்கள். ஆணையிடுவதன் மூலம் அவற்றை மந்திரங்களாக மாற்றுகிறார்கள். திரு ஞான சம்பந்தர் தேவாரப்பதிகங்களில் ஆணை நமதே என்று வெளிப்படையகவே பேசுவதைக் காணலாம். இதனை வள்ளுவரும்,

**மறைமொழி மாந்தர் பெருமை வையத்து**
**நிறைமொழி காட்டி விடும்** என்கிறார்.

இயந்திர வாழ்க்கை உடைய இந் நாட்களில் கூட காலை, மாலை இரு வேளைகளிலும் குறைந்தது பத்து நிமிடங்களாவது அமர்ந்து ஓம் நமச்சிவாய, ஓம் நமோ நாராயண, ஓம் சரவணபவ, புத்தம் சரணம் கச்சாமி தன்மம் சரணம் கச்சாமி, அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி என்பன போன்ற பல மந்திரங்களில் தங்கள் மனதில் எது அமைதியை உண்டாக்குகிறதோ அம் மந்திரத்தை ஜெபிக்கத்தொடங்கினால், வெகு விரைவில் மன இறுக்கம் தளர்வதைக் காண முடியும். மன இறுக்கம் தளர்ந்தால் இரத்த அழுத்தம் குறையும், சர்க்கரை குறையும், இதயத்துடிப்பில் சமநிலை ஏற்படும்.

மந்திரங்களை எவ்வாறு தெரிவு செய்வது. முன்னை நாட்களில் மந்திரங்களை உபதேசம் செய்தார்கள். இற்றை நாட்களில் அவர்கள் அருகிவிட்டார்கள். ஒருவருக்கப் பொருத்தமான மந்திரத்தை அவரவரே தேர்வு செய்து கொள்ளலாம். ஒருவாரத்திற்கு ஒருமந்திரத்தை ஜெபித்துப் பார்க்கலாம். அவ்வாறு ஜெபிக்கும்போது எவ் மந்திரம் அவருக்கு மன அமைதியை ஏற்படுத்துகின்றதோ அதுவே அவருக்குப் பொருத்தமானதாகும்.

ஒருவர் மனோநிலை போன்று இன்னொருவருடையது இருப்பதில்லை. அதுபோன்றே ஒருவருக்குப் பொருத்தமான மந்திரம் மற்றவர்க்குப் பொருத்தமாய் அமைந்துவிடுவதில்லை. எனவேதான் நூற்றுக்கணக்கான மந்திரங்களை அருளிச் செய்துள்ளனர். இம்மகா மந்திரங்களை அடுத்த சந்ததியிரருக்குச் சரியானமுறையில் கடத்த வேண்டிய பாரியபொறுப்பு நம் கையில் உள்ளது.

# பரந்து, விரிந்து, விழுதுகள் பல சொரிந்து நிற்கும் பெரும் கலைமரமாம் 'கலைஞர்" தயாநிதியுடன் ஒரு சந்திப்பு.

வண்ணை தெய்வம்

'உலகமே ஒரு நாடகமேடை நாமெல்லாம் அதில் நடிகர்கள்!' என்ற பழமொழி பொதுவானதாக இருந்தாலும் கலைஞர்களுக்கென்று தனியானதொரு மரியாதை இருக்கின்றது. ஏனெனில் அவர்கள் பூந்தோட்டங்கள், பொன்நிலாக்கள், பொன்மீன்கள், பொன்மான்கள், பொன்ஒளிகள், கனிதரும் சோலைகள், மக்-களை மகிழ்ச்சியில் ஆழ்த்தவென ஆண்டவனால் படைக்கப்பட்ட தாரகைக் கூட்டங்கள், அலையின் ஓட்டங்கள், விலையில்லா வைரங்கள், முயற்சியின் முனைகள், உழைப்பின் அடையாளங்கள் இப்படியாக கலைஞர்களின் பெருமையை சொல்லிக்கொண்டே போகலாம்.

உடலால் மறைந்தாலும் தனது கலைப் படைப்புகளால் இன்றுவரை மக்கள் மனங்களில் நிலைத்து நிற்பவர் உலகம் போற்றும் நாடகமேதை ஷேக்ஸ்பியர் அவர்கள். அந்த மேதை யின் நாடகங்களுக்காக தன்னையே அர்ப்பணித்து செயற்பட்ட ஒரு நடிகர் சேர் லோறன்ஸ் ஒலிவர் அவர்கள். அந்த நடிகர் ஒரு செவ்வியில் சொல்லியிருந்தார் 'ஷேக்ஸ்பியர் அவர்களின் நாடகங்களில் நான் நடித்த பின்னர்தான் எனது கலைவாழ்வு உயிர் பெற்றது' என்று.

இதற்கு பதில் கூறும் விதமாக பிறிதொரு செவ்வியில் ஷேக்ஸ்பியர் அவர்கள் சொல்லியிருந்தார் 'எனது நாடகங்கள் உயிர் பெற்றதே லோறன்ஸ் ஒலிவரால்த்தான்' என்று! இதில் முன்னவர் உயிர்த்துடிப்பான நாடகங்களை எழுதியவர். மற்றவர் நாடகங்களை உயிரோட்டமாக்கியவர்.

இந்த இரண்டையும் ஒருங்கே தன்னகத்துள் கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை தானே எழுதி, இயக்கி, பல கலைஞர்களை உருவாக்கி பெரும் கலைமரமாக கம்பீரமாக நிமிர்ந்து நிற்பவர் எமது அன்பிற்குரிய கலைஞர் தம்பையா. தயாநிதி அவர்கள்.

இவரது அண்ணன் திருமிகு. அப்புக்குட்டி. ராஜகோபால் அவர்கள் உலகத்தமிழர்கள் மத்தியில் பெரும் புகழ்பெற்ற கலைஞராக இருந்தபோதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பெயரை முன்வைத்து தன்னை முன்னிலைப் படுத்தாமல் தனது திறமையால் மட்டும் செயற்பட்டு கலைப்பயணத்தில் வெற்றி கண்டவர் திரு. தயாநிதி அவர்கள்.

நான் பாரீஸ் வந்த ஆரம்பகாலம் (1983) ஒரு கலை நிகழ்வொன்றை பார்த்துவிட்டு வீடு செல்வதற்காக மெற்றோவில் பயணித்துக்கொண்டிருந்தேன் நான் பயணித்த அதே மெற்றோவில் எனக்கு சில ஆசனங்கள் முன்னதாக இரண்டு இழைஞர்கள் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். விவாதத்தின் சாராம்சம் ஒருவர் சொன்னார் 'கலை மக்களை மகிழ்விக்க வைக்கும் ஒரு ஊடகம். அந்தக் கலையை காசுக்கு விற்கக்கூடாது' என்று. அதற்கு மற்றவர் வாதிட்டார் 'புலம் பெயர்ந்த நாங்கள் இங்கு வேலை ஒண்டு வேண்டும் என்பதற்காக தெரியாத தொழிலையெல்லாம் செய்கின்றோம்! இதில் தொழில் தெரிந்த-வர்கள் ஊரில் மெக்கானிக்காக இருந்தால் இங்கு பகுதி நேரமாக வாகனம் திருத்த வாய்ப்பு கிடைத்தால் அதை செய்கின்றர். பெயின்ற் வேலை தெரிந்த-வர் அப்படி ஒரு வாய்ப்பு கிடைத்தால் அதை செய்கின்றார்கள். அப்படித்தானே கலைஞர்கள் நாங்களும். மக்களை மகிழ்விப்பதற்காக எங்கள் நேரத்தையும், உழைப்பையும் இலவசமாக கேட்பது எந்த வகையில் நியாயம்'?. இப்படியாக வாதிட்டுக்கொண்டிருந்தவர் கலைஞர் தயாநிதி அவர்கள்.

அன்று திரு. தயாநிதி அவர்களை எனக்கு அறிமுகமில்லை. ஆனாலும் அவருடைய வாதத்தில் உள்ள நியாயம் என்னைக் கவர்ந்தது. இவருடைய வாதத்தில் எவ்வளவுதான் நியாயம் இருந்தாலும் அன்றைய காலகட்டத்தில் புலம் பெயர்ந்த கலைஞர்கள் எவரும் பணம் பெற்றுக்கொண்டு மேடையேறியதெல்லாம் கிடையவே கிடையாது. ஆனால் காலப்போக்கில் தான் அன்று சொன்னதை இன்று நிஜமாக்கி தொ ழில் ரீதியாக கலைஞர்களுக்கு ஒரு மரியாதையை ஏற்படு-த்திக் கொடுத்தவர்களில் திருவாளர் தயாநிதியும் ஒருவர்.

இன்று நம் மத்தியில் நடிகராக, நாடக ஆசிரியராக, தயாரிப்பாளராக, இயக்குனராக, கவிஞராக, தான் எடுத்த துறைகளில் எல்லாம் வெற்றி முகம் காட்டிவரும் தயாநிதி அவர்கள் இதுவரை 200 நாடகங்களை எழுதி இயக்கியிருக்கின்றார். 'ரணங்கள்' என்னும் கவிதைத் தொகுதியை வெளியிட்டிருக்கின்றார், இவை தவிர வானொலி, தொலைக்காட்சிகள் மூலமாகவும் தனது கலைத் திறனை வெளிப்படுத்தி ஐரோப்பவிலும், அமெரிக்கா, கானடா போன்ற நாடுகளிலும் நம்மவர்கள் மத்தியில் பிரபலமாகியிருக்கும் இவரை திருமறைக் கலா மன்றத்தின் 'கலைவண்ணம் 2015' நிகழ்வில் கௌரவிப்பதனையொட்டி 'முற்றம்' சஞ்ச-ிகைக்கு செவ்வி காண்பதற்காக ஒரு மாலைப்பொழுதில் சந்திக்கின்றேன்.

வண்ணை :- வணக்கம் தயாநிதி

தயாநிதி :- எனது அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய வண்ணை அண்ணாவிற்கும், முற்றம் வாசகர்களுக்கும் எனது அன்பான வணக்கங்கள்.

முதலில் உங்கள் கலைத்துறையில் உங்களது கடுமையான உழைப்பிற்கும், அதன் வெற்றிக்கும், திருமறைக்கலா மன்றம் தரும் கௌரவத்திற்கும் எனது வாழ்த்துக்கள்

நன்றி அண்ணா

எந்தவொரு முயற்சியாக இருந்தாலும் முதன் முதலில் ஆரம்பித்தது எல்லோருக்கும் மறக்கமுடியாத ஒன்றாகும்.உங்களது முதல் கலைப் பயணம் எப்பொழுது, எங்கு, என்னமாதிரியான சந்தர்ப்பத்தில் ஆரம்பித்தது?

**மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பழைய மாணவர்கள் சார்பில் அட்டமத்துச் சனியன் என்னும் நாடகத்தை இரா பாலச்சந்திரன் இயக்க காலம்சென்ற ஐசாக் இன்பராசாவோடு முதன்முறையாக மேடையேறினே.**

நீங்கள் எழுதி இயக்கிய முதல் நாடகம் எது? எங்கு மேடையேற்றப்பட்டது? அந்த நாடக அரங்கேற்றம் பற்றி......

**ஞானம் பிறந்தது என்ற நாடகம் பாரிஸ் தமிழ்க் கல்லூரிக்காக நண்பர் ஜெயக்குமார், மில்ரன் போன்றவர்கள் அணுகியபோது அதனை எழுதி மேடையேற்றினேன். அதில் இரா.குணபாலன், ஆசைப்பிள்ளை சுதா.பிலிப்தேவா போன்றோருடன் மேடையேறியது மறக்கமுடியாத நினைவாகும்.**

உங்கள் கல்லூரி காலங்களில் நீங்கள் ஒரு முழுநேர விளையாட்டு வீரனாகவே இருந்திருக்கின்றீர்கள். புலம் பெயர்ந்த பின்னர் முழுநேர கலைஞனாகவே மாறி-விட்டீர்கள். இதன் காரணம் என்ன?

**இங்கும் என் உயிர் நண்பன் கிருபாவுடன் உதைபந்தாட்டத்தில் விளையாடிக்கொண்டுதான் இருந்தேன். காலப்போக்கில் மைதானத்தில் நடைபெற்ற வன்முறை சம்பவத்துடன் என் விளையாட்டுக்கு தலை முழுக்கிட்டேன். அதன்பின்னர் என் சாயல் அப்புக்குட்டி இராஜகோபாலன் போலிருக்கின்றது என இனம்கண்ட சிலரால் தமிழர் ஒருங்கிணைப்பின் பேரில் அரியாலையூர் வாசன் இயக்கிய நாடகத்தில் முதன்முறையாக பாரிசில் மேடையேறினேன்......**

கலைத்துறைக்கு நீங்கள் வருவதற்கு உந்துசக்தியாக இருந்வர்கள் யார்? நன்றிக்குரியவர்கள் யார்?

**நண்பர்கள் தான் காரணம். சுதா, பிலிப்தேவா, குணபாலன், லோகதாஸ், பிரியாலயம் துரைஸ் எனச் சொல்லலாம். இவர்களோடு என்னை நாடகம் எழுதும் பொறுப்பினை சுமத்திய அன்றைய பாரிஸ் தமிழர் கல்விநிலைய பொறுப்பாளர் திரு ஜெயக்குமார் என்பது நிதர்சனம்.**

இன்று நீங்கள் ஒரு தொழில் முறைக் கலைஞனாக இருக்கின்றீர்கள். அந்த வகையில் பலருக்கு வழிகாட்டியாகவும் இருக்கின்றீர்கள். இதேவேளை கலைத்துறைக்குள் நுளைந்து தங்கள் சொந்தப் பணத்தை இழந்தவர்கள் இங்கு ஏராளம்பேர் உண்டு! உங்களுக்கு அப்படியான அனுபவம் உண்டா?

.....**இந்த விடயத்தில் இன்றுவரை நான் மிகவும் தெளிவாக இருக்கிறேன். இதற்கான காரணம் எமது நாடகத் தந்தை ரகுநாதன் அவர்களின் அனுபவம் எனக்கு முன்னுதாரணமாக இருந்தது. ஊரில் உள்ள காணி பூமி விற்று கலை வளர்க்க முயன்று தோற்றவர். அதுமட்டுமல்லாமல் தாயகத்தில் பல கலைஞர்களின் வறுமைக்கோட்டு நிலையை நன்கு அறிந்து வைத்திருந்ததும் காரணமாகலாம். .........**

அனேகமான உங்களது நாடகங்கள் தாய் மண்ணின் அனர்த்தங்களையும், அவலங்களையும் மையமாக வைத்தே படைக்கப்பட்டிருக்கின்றன. நீங்களோ, அல்லது உங்கள் குடும்பத்தில் யாரேனும் அப்படியான அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்களா? அதன் பாதிப்புத்தான் உங்களது கலை வடிவங்கள் அனைத்தும் அப்படியாக அமைகின்றதா?

**... எனது குடும்பத்தில் யாரும் போர் அனர்த்தங்களால் பாதிக்கப்படவில்லை. இருந்தும் மண்பற்றும் மக்களின்**

**அவலங்களும் உயிர் இழப்புக்களும் என்னை உந்தியது என்பதே உண்மை**

ஐரோப்பாவில் வானொலி, தொலைக்காட்சிகளில் உங்கள் பங்களிப்பு அதிகமாகவே இருந்திருக்கின்றது. இவைகளின் வரவுகளால் மேடை நாடகங்களின் அரங்கேற்றங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றதா? வருங்காலத்தில் ஏற்படலாம் என நீங்கள் கருதுகின்றீர்களா?

**....இன்றுவரை ... அந்த அனுபவமும் அதில் பணியாற்றியதாலும் நிறையவே வளர்த்துக்கொள்ள முடிந்திருக்கிறது. சுருங்கச்சொன்னால் அந்த அந்தஸ்த் தையும் .... அங்கீகாரத்தையும் தந்திருக்கிறது. இதனால் மேடை நாடகங்களுக்கு இன்றுவரை பாதிப்புகள் வரவில்லை. இது அத்தியாவசியமானதும் எனலாம் ............**

நகைச்சுவை, குணசித்திரம் இவைகளில் தங்களுக்கு பிடித்தமான பாத்திரம் எது? இப்படியானதொரு பாத்திரத்தில் நடிக்கவேண்டும் என்னும் ஆசை நிறைவேறாமல் இருக்கின்றதா? அது என்ன பாத்திரம்?

**....ஆரம்பத்தில் நகைச்சுவை மிகவும்பிடித்திருந்தது. காலம் ஒட்டுமொத்த தமிழரையும் கலங்க வைத்த போது அதில் நான் மட்டும் விதிவிலக்காக முடியாதே. ஊரோடு சேர்ந்து நானும் அழுகின்றேன். இன்று நான் சந்திக்கும் அரங்குகளில் நகைச்சுவை ஒரு பகுதியாகவும் அரங்கேறுகிறது.**

இதுவரை நீங்கள் அரங்கேற்றிய பல.. நாடகங்களில் அரங்கேற்றுவதற்கு மிகவும் சிரமப்பட்ட நாடகம் எது?

**ஒவ்வொரு நாடகமும் சிரமமான விடையம்தான். குறிப்பாகச் சொல்வதானால் மாவீரர் மேடையிலே 2013 ம் ஆண்டு வரலாறு என்னும் நாடகம் எங்கள் அரசியல் சம்பந்தமானது தொழில்நுட்ப விடையங்களால் பெரும் சிரமத்தை சந்திக்க நேரிட்டது.**

உங்களது நாடகங்களின் அரங்கேற்றங்களுக்குப் பிற்பாடு வருகின்ற கருத்துக்கள், விமர்சனங்கள் இவைகளை நீங்கள் எப்படி எதிர்கொள்வீர்கள்? அவை உங்களை உற்சாகப்படுத்துமா? ஆல்லது சோர்வடைய வைத்திருக்கின்றதா?

**....நிட்சயமாக எனது நாடகங்கள் பல வலிகளைச் சுமந்தபடி அரங்கேறுவது வழமை. ஒலி அமைப்பு சீர்கேடு ஒத்துழைக்காத இடங்களில் காட்டமான விமர்சனங்களை சந்திப்பதுண்டு. கருத்துரீதியில் இதுவரை சிக்கல் ஏதும் தலை தூக்கவில்லை. ஆனாலும் ஈழநாடு பத்திரிகையின் முதலாவது ஆண்டு விழாவில் அர்ப்பனம் எனும் நாடகம் சின்ன நெருடலை ஏற்படுத் தியிருந்தது. மறக்கமுடியாத சம்பவம் அது ஒன்றுதான். ......................**

ஆரம்ப காலங்களில் அதிகமான தொலைக்காட்சி நாடகங்களை தயாரித்த உங்களைப் போன்றவர்கள் இப்பொழுது அந்தத் துறையில் அவ்வளவாக நாட்டம் காட்டுவதில்லையே காரணம் என்ன? இளம் கலைஞர்களோடு போட்டி போட முடியவில்லையா?

**....உண்மையான விடையம். அவர்கள் மிகவும் நேர்த்தியாக தொழில்நுட்பக் கலைகளைக் கற்றறிந்து செயல்படுகிறார்கள். தயக்கமில்லாமல் அவர்களோடு சேர்ந்து ஓடுகின்றோம் .....................**

நவீன நாடகங்கள் பற்றிய உங்கள் கருத்து.

**..காலத்தின் தேவையும் மாற்றமும் அவை...! நன்கு பயிற்சி எடுத்து ஆற்ற வேண்டிய பணி. சிறப்பானதும்... என்பதில் மாற்றுக் கருத்து எனக்கு இல்லை .........**

இந்த கலைத்துறை வாழ்வால் நீங்கள் திருப்தி அடைந்திருக்கின்றீர்களா? அல்லது 'நான் நினைத்த இலக்கை இன்னமும் அடையவில்லையென்ற ஆதங்கம் ஏதாவது மனதிற்குள் இருக்கின்றதா?

**...நானும் என் குழுவினரும் ஒரளவில் திருப்தி அடைந்திருந்தாலும் என் இலக்கு தொழில் ரீதிக் கலைஞர்களாக வேண்டும் என் பதுதான் எட்டுவதற்கான முயற்சி இன்னும் தேவைப்படுகின்றது.... குறிப்பிட்ட கலைஞர்கள் நட்சத்திர அந்தஸ்தைபெற்று வாழ்வதும் கண்கூடு ................................**

கலைத்துறையில் மட்டுமல்ல பொதுவாழ்விலும் பலதரப்பட்ட மனிதர்களைச் சந்தித்திருப்பீர்கள்! இவர்களில் தாங்கள் வியந்து பார்த்த மனிதர் யார்?

**நடிப்பிசைக்காவலர் திரு கிரகறி தங்கராஜா எனும் பெரும் விரட்சத்தை மறக்கமுடியாது. அவரின் தெய்வ வாக்குப்போல அவர் கூறியதின்படி நான் ஓர் ஜன்ரஞ்சனாகி இருப்பது நீங்கள் அறிந்ததே ............................**

உங்கள் வாழ்வை கணக்கிட்டுப் பார்த்தால் மாதத்தில் பாதி நாட்களை கலைத்துறைக்காகவே ஒதுக்கிவிடுகின்றீர்கள்! (அதில் பாதி நாட்கள் வெளிநாடுகளில்) இதற்கு உங்கள் குடும்பத்தின் ஒத்துளைப்பு எந்த அளவில் இருக்கின்றது?

**...அதற்கான நன்றியைத் தெரிவிக்கும் சிறந்த தளமாக நான் இந்த செவ்வியை பயன்படுத்துகிறேன்... வனம் ஒன்றினை நந்தவனமாக்கியவள் என் மனைவி. என் ஆவலுக்கு ஒத்துழைக்கும் என் இரு கண்மணிகள். இவர்கள் இன்றி எனக்கு கலை மட்டுமல்ல வாழ்வும் இல்லை என்றே சொல்வே.....**

'அப்புக்குட்டி' என்று சொன்னாலே தெரிந்து கொள்ளும் அளவிற்கு உங்களது சகோதரர் ராஜகோபால் அவர்கள் மிகவும் பிரபலமான கலைஞர். அவர் 'அப்புக்குட்டி' என்னும் பாத்திரத்தில் நடித்து பிரபலமானதால் அந்தப் பெயரும் அவரோடு ஒட்டிக்கொண்டுள்ளது! உங்கள் பெயருக்கு முன்னால் 'சின்னக்குட்டி' என வருவதற்கு என்ன காரணம்? அப்புக்குட்டி ராஜகோபாலின் தம்பி என்பதை அடையாளப் படுத்துவதற்காக 'சின்னக்குட்டி' என்னும் பெயரை உங்கள் பெயருக்கு முன்னால் இணைத்துக்கொண்டீர்களா?

**... இல்லை இலங்கை கலை அமுதம் இயக்குனர் எஸ்.கே.ராஜன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை விழாவிற்கு அன்பு அறிவிப்பாளர் திரு.அப்துல் கமீட் அவர்கள் அப்புக்குட்டிக்கு ஒரு தம்பி சின்னக்குட்டி உங்களோடு வாழ்ந்து இங்கு கலையுலகில் சஞ்சரிக்கிறார் என அரங்கத்தில் கூறிய வார்த்தை அது காலப்போக்கில் என்னோடு ஒட்டிக்கொண்டது.**

திருமறைக்கலா மன்ற வழங்குகின்ற இந்த கௌரவம் பற்றி?

**...இது ஒரு கனவு. வணபிதா சவரிமுத்து அடிகளாரிடம் பயிற்சியும் பாராட்டும் பெற்றவன். அவர் ஸ்தாபித்த திருமறைக் கலாமன்றம் மூலம் கிடைக்கும் விருது மகத்தானது..........**





சக கலைஞர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை.

**...பணிவு, துணிவு, உழைப்பு காலம்தவறாத ஒத்திகை சுருங்கச்சொன்னால் இது ஒரு அர்ப்பணிப்பு. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.........**

எங்கள் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் பொறுமையாக பதிலளித்தமைக்கு நன்றி தயாநிதி.

**...என்னோடு கலைப்பணியாற்றும் சகல நண்பர்களுக்கும் என்னை இயக்கிய மூத்தோருக்கும் வரும்காலத்திலும் இணைந்து பணியாற்ற வரும் கலைஞர்களுக்கும், குறிப்பாக தனது தமிழ்ப்பண்ணையில் ... என்னைத் தமிழ் அறுவடை செய்வித்த நான் மதிக்கும் கவிஞர் வண்ணைத்தெய்வமாகிய உங்களுக்கும் என் நிறைவான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.**

..................................

# வேர்களும் முகங்களும்

டேமியன் சூரி

"நீ ஒரு பாறை" நாட்டுக்கூத்தின் வெற்றிகரமான மேடையேற்றத்தின் பின்னர் அதை பார்த்து இரசித்த பலரிடமிருந்து பாராட்டுதலும், கூத்து பற்றிய புதிய உத்வேகமும், புரிதலும் அதனைப் பாதுகாத்து வளர்க்க வேண்டுமென்ற அவாவும் உருவாகியது. அது ஒரு கத்தோலிக்க கூத்தாகையால் யாழ் மாவட்டத்தின் பலபாகங்களிலுமிருந்து அப்படியான கூத்துக்களை தமது பகுதிகளிலும் பழக்கி மேடையேற்றம் செய்யவேண்டும். அல்லது அந்தந்தப்பகுதியில் உள்ள கலைஞர்களுக்கு பயிற்ச்சியளிக்க ஆவன செய்யவேண்டும் என்ற வேண்டுகோள்கள் பல எமது மன்றத்தின் இயக்குனருக்கு கிடைக்கப்பெற்றது. திருமறைக்கலாமன்றம் கூத்து, நாடகம், நாடகப் பயிற்சிப்பட்டறை, மன்ற வெளியீடு என பல பரிமாணத் தளங்களில் வளர்ச்சியை நோக்கி தடம் பதித்து பயணித்த காலமாதலால் பெரிய அளவிலான புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க இயக்குனர் விரும்பவில்லை. இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய பகுதியான வலைப்பாட்டின் பங்குத்தந்தையின் அழைப்பை ஏற்று அவர்களால் நாடாத்த திட்டமிட்டிருந்த ஒரு கலைநிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக மன்றக் கலைஞர்களுடன் பங்குகொள்ள எமது இயக்குனர் ஒப்புக்கொண்டார். இக்கலைப்பயணம் சனி, ஞாயிறு ஆகிய இருதினங்களைக் கொண்டதாக இருந்தது. நாட்டுக்கூத்து, இசை, நாடகம் சார்ந்த கலைஞர்களோடு நானும் பயணமானேன்.

சனி காலை பயணத்தை மேற்கொண்ட நாம் மதியம் 12மணிக்குள் அங்கு போய்ச் சேர்ந்து விட் டோம். கடலோரக் கிராமம். அங்கிருந்துதான் இரணைதீவுக்கு படகில் பயணம் செய்வார்கள். இறங்கு துறைக்கருகாமையில் பாடசாலை, கத்தோலிக்க ஆலயம், பங்குச்சுவாமி தங்கும் உறைவிடம் அமைந்திருந்தது. மக்கள் குடியிருப்பு அதிலிருந்து தூரத்தில் அமைந்திருந்தது. 5அல்லது 10பரப்பு காணிகளுக்கு இடையில் வீடுகள் அமைத்து மக்கள் வாழ்ந்தார்கள். நாங்கள் அங்கு சென்றதும் நடைப்பயணத்தில் கிராமத்தை சுற்றிப்பார்த்தோம். நகரச்சூழலில் இருந்து போன எமக்கு அது ஒரு புதிய மாற்று அனுபவம்தான். அன்று இரவு கலைநிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. அதற்காக பிரத்தியேக மேடை அமைக்கப்பட்டிருந்தது. பி.ப. 3மணிதொடக்கம் கலைஞர்களும், மக்களும் அந்த அரங்கத்தை நோக்கி மாட்டுவண்டில்களில் வரத்தொடங்கினார்கள். பி.ப.5 மணியளவில் எம்மை அழைத்த எமது இயக்குனர் திருமறைக்கலாமன்றமும் ஒரு நிகழ்ச்சியை செய்தல்வேண்டுமென பங்குத்தந்தை விரும்புவதால் ஒரு நிகழ்ச்சியை ஆயத்தம் செய்து மேடையேற்றும்படி எம்மைக் கேட்டுக்கொண்டார். மிக மகிழ்ச்சியாக புதிய அனுபவங்களை முகர்ந்து கொண்டிருந்த எமக்கு ஒரு தடுமாற்றம், அதிர்ச்சி. ஏனெனில் நாம் இந்த நிகழ்ச்சிக்காக எந்தவித ஆயத்தத்தோடும் வரவில்லை. இசைக்கருவிகள், முகப்பூச்சுப் பொருட்கள், நாடக உடுப்புக்கள் எதுவும் கொண்டுவரவில்லை. என்ன செய்தோ ஒரு நிகழ்ச்சியை மேடையேற்றி மன்றத்தின் மரியாதையை காப்பாற்றுங்கள் என்பது இயக்குனரின் கட்டளை. எமக்குள் ஆலோசனை செய்து மந்திரி, தளபதி உட்பட ஏரோதரசன் வருகையை "நீ ஒரு பாறை" நாட்டுக்கூத்திலிருந்து மேடையேற்றுவது என தீர்மானித்தோம். என்னோடு நடித்தவர்களும் அக்கலைப்பயணத்தில் இணைந்திருந்தமையால் அவ்வெண்ணம் ஈடேற இலகுவாக இருந்தது. கோவிலில் இருந்த ஆர்மோனியத்தையும் மிருதங்கத்தை எடுத்து அண்ணாவியார் பாலதாசும், கலைஞர் அண்டர்சனும் பயன்படுத்திக்கொண்டார்கள். அரச வேடங்களுக்கு பொருத்தமான உடுப்புக்கள் இல்லாத பொழுதிலும் வேட்டியை தாறுபாச்சிக்கட்டியும், சால்வையால் தலையில் ஜமீன்தாரைப்போல் தலைப்பாகை கட்டியும் நவீன கால அரசர்களைப்போல எம்மை நாம் மாற்றிக்கொண்டோம். எம்மோடு இணைந்து பயணம்மேற்கொண்ட மற்றய கலைஞர்கள் 7மணியளவில் ஆரம்பித்த கலைநிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருக்க நாம் மேடைக்கு பின்புறம் அமைந்திருந்த மரத் தோப்பிற்குள் ஒரு ஒத்திகையும் பார்த்து ஆயத்தமானோம்.

எங்களது நிகழ்ச்சிக்குரிய நேரம் வந்ததும் நாங்கள் மேடையில் தோன்றினோம். பளபளப்பான உடுப்புக்களோடு அரசர்கள் தோன்றும் மேடையில் நாம் சாதாரணமாக தோன்றியதும் ஒரு சலசலப்பு. பார்வையாளர் மத்தியில் எதிர்பார்ப்பு கிடைக்கவில்லையே என்பது போன்ற உணர்வு. இருப்பினும் கூத்துப் பாடல்களைப் பாடி ஆடத் தொடங்கியதும் மக்கள் மத்தியில் உற்சாகம் பிறந்தது. கைதட்டலுக்கு குறைவே இல்லை. கூத்து நிகழ்வின் வரவுக் காட்சிகளில் வரும் மெட்டுக்கள் மிகவும் உற்சாகமானவையாக இருந்தமையால் பார்வையாளர்களை எமது குரல்வளங்களால் எம்பால் ஈர்த்து எமது கம்பீரமான நடையினாலும், ஆட்டத்தினாலும் பரவசப்படுத்தி எமது நிகழ்ச்சியை நிறைவு செய்தோம். இயக்குனர் எம்மைக் கட்டி அணைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அண்ணாவியர் பாலதாஸ் தலைமையிலான அந்தக் கலைக்குழுவின் திடீர் நிகழ்ச்சிக்கு கிடைத்த வரவேற்பு புதிய அனுபவத்தையும், தென்பையும், துணிவையும் எம் எல்லோருக்கும் ஏற்படுத்தியது. இன்று திருமறைக்கலாமன்றத்தில் எம்போன்ற கலைஞர்கள் துணிவுடன் செயற்படவும், கலைநிகழ்வு நேரங்களில் ஏற்படும் திடீர் பிரச்சனைகளை சாதுரியமாக சமாளிக்கவும் இது போன்ற எமது இளமைக்கால கலை அனுபவங்கள் எமக்கு துணையாக நிற்கின்றன. 2ம் நாள் அன்று மேடையேற்றப்பட்ட கூத்து, நாடகங்கள் பற்றிய மதிப்பீடு அதுசம்பந்தமான மக்களின் அபிப்பிராயம், கலைநிகழ்வுகளை வெற்றிகரமாக மேடையேற்ற இனி என்ன செய்யலாம் என்பது பற்றி ஆராய ஒரு கலந்துரையாடலுக்கு ஒரு அழைப்பு விடுக்கப்பட்டது. அது பற்றி தொடரும் கட்டுரையில் பார்ப்போம்.

## கலைஞான பூரணன் டேமியன் சூரி




பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தின் இணைப்பாளரான கலைஞர் டேமியன் சூரி அவர்கள் கடந்த 10.08.2015ல் நடைபெற்ற திருமறைக்கலாமன்ற பொன்விழாவின் "பொற்தூறல்" ஆவணி நிகழ்வில் "கலைஞான பூரணன்" எனும் திருமறைக்கலாமன்ற அதி உயர்விருதினை யாழ் மாநகரசபை ஆணையாளரால் வழங்கி கௌரவிக்கப்பட்டார். "முற்றம்" சஞ்சிகையும் அவரை பாராட்டி வாழ்த்துகின்றது.




## பிரான்ஸ் திருமறைக்கலாமன்ற உறுப்பினருக்குக் கௌரவம்


திருமறைக்கலாமன்றத்தின் 05.09.2015ல் நடைபெற்ற திரு மறைக்கலாமன்ற பொன்விழாவின் "பொற்தூறல்" நிகழ்வில் சி.கிருஷ்ணன் அவர்கள் "இயக்குனர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார். கௌரவிப்பு உரையை திருமறைக்கலா மன்றத்தின் பிரதி இயக்குனர் ஜோன்சன் ராஜ்குமார் வழங்க யாழ்மாவட்ட அரசசார்பற்ற நிறுவனத்தலைவர் திரு.தற்பரன் அவர்கள் பொன்னாடை போர்த்த மூத்தகலைஞர் பேர்மனஸ் மாலை அணிவித்து இயக்குனர் விருது வழங்கிக் கௌரவித்தார் "முற்றம்" சஞ்சிகையும் அவரை பாராட்டி வாழ்த்துகின்றது.

## 18.10.2015ல் R.T.M பிறதர்ஸ்ன் 23வது கலைத்தென்றல் விழாவில் கௌரவிக்கப்பட்டவர்கள்






# நினைவுப் பகிரல்



ரோமான் கிறிஸ்ரியன்
(பிசுப்பு)
1945 - 2015

எம் வாழ்வில் ஒளியேற்றி எம்மை வழி நடத்திய எங்கள் அன்புள்ள அப்பா எம்மை விட்டுப் பிரிந்து இருநூற்றி ஐம்பது நாட்கள் பறந்தோடி விட்டன என்றும் நீங்கா நினைவோடு நாம் வாழ்கின்றோம். நிலை வாழ்வை தேடிச் சென்ற உங்கள் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

- அன்பு மனைவி, பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்